இந்திரா சௌந்தரராஜன்

# திறக்காதே ஆபத்து

# திருக்காதே ஆபத்து

## 1

**ஊ**ரிலிருந்து தந்தி வந்திருந்தது.

இந்த செல்போன் யுகத்திலும் தந்திக்கு உயிர் இருப்பதை நினைத்து ஆச்சரியத்தோடும், அந்த தந்தியோடும் பாண்டியனின் அறைக்குள் நுழைந்தான் அட்டெண்டர் கணபதி. 'சதர்ன் இண்டஸ்ட்ரீஸ்' என்னும் அந்த அலுவலகத்தின் அறையில் மேனேஜர் சீட்டில் பாண்டியன்!

அதுவும் முக்கியமான ஃபைல் பார்த்தபடி, நிமிர்ந்தான்.

"என்ன கணபதி?"

"தந்தி சார்..."

"யாருக்கு... எனக்கா?"

"ஆமாம் சார்... இப்பத்தான் வந்துச்சு!"

கணபதி தந்தித் தாளை நீட்டினான். துளியும் பதட்டமில்லாமல் அதை வாங்கிப் பார்த்து பாண்டியன் முகத்தில் ஒரு சன்னமான மோனாலிஸா சிரிப்பு.

"சார்..."

"என்ன கணபதி?"

"என்ன சார்... எதுனா நல்ல நியூஸா?"

"ஆமாம் கணபதி. ஊர்ல எங்க வீட்ல குலதெய்வத்துக்கு பூஜை போடப் போறாங்களாம். நாலு நாள் லீவு போட்டுட்டு கிளம்பி வரச் சொல்லி அப்பா தந்தி கொடுத்திருக்கார்..."

"நல்லது சார். ஆமாம்... உங்க வீட்ல போன் இல்லீங்களா?"

–கணபதி எங்கு வருகிறான் என்பது பாண்டியனுக்குப் புரிந்தது.

"இல்ல கணபதி. இந்த ஹைடெக் யுகத்தோட எந்த ஒரு பாதிப்புக்கும் எங்க வீட்ல இடமில்லை. எங்க வீட்டுக்கு மட்டுமில்ல– எங்க கிராமமான சரவணம்பட்டிக்கும் இட மில்லைன்னு சொல்லலாம்."

"ரொம்ப ஆச்சரியமா இருக்கு சார். நீங்க தான் விதிவிலக்கு போல..."

"ஆமாம். அதுதான் உண்மை. தெரியாத்தனமாக நல்லா படிச்சு மார்க் வாங்கினேன். அந்த மார்க் தான் காலேஜ்ல சீட் வாங்கித் தந்துச்சு. இல்லேன்னா காடு கழனியை பாத்துகிட்டு எங்க ஊர் வயல்ல நான் டிராக்டர் தான் ஓட்டிகிட்டிருப்பேன்."

"அப்ப அந்த மார்க்குக்கு நானும் ஒரு நன்றியை சொல்லிக்கிறேன்சார். இல்லேன்னா இந்த கம்பெனியில நீங்க மேனேஜரா வந்திருக்க முடியாது பாருங்க."

–கணபதி பக்குவமாக ஜால்ரா தட்டினான். பாண்டியன் அதை ரசிக்காமல் "சரி சரி போய் வேலைய கவனியுங்க." என்றபடி தந்தி தாளை மடக்கி பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

கணபதிக்கும் புரிந்தது.



இனி ஒரு வார்த்தை பேசினாலும் பாண்டியன் சகஜமாய் பேசமாட்டான். "இது ட்யூட்டி டைம், அரட்டை அடிக்கிறது தப்பு." என்று கடுமைக்கு மாறத் தொடங்கி விடுவான். எனவே டேபிள் மேல் அவன் குடித்துவிட்டு வைத்திருந்த டீ கப் சாஸரை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான்.

ரிசப்ஷன் பக்கமாய் போனபோது ரிசப்ஷனிஸ்ட் மஞ்சளா காத்திருந்தது போல கேட்டாள்.

"என்ன கணபதி... தந்தி யாருக்கு?"

"நம்ம பாண்டியன் சாருக்கு தான் மேடம்!"

"யார் செத்துப் போயிட்டாங்க கணபதி?"

மஞ்சுளா கண்ட்ரோல் போர்டில் கைகளை இயக்கியபடி கேட்ட அந்த கேள்வி கணபதியை ஒரு கிள்ளு கிள்ளியது.

"ஏன் மேடம்... தந்தின்னா சாவுச் செய்தியாதான் இருக்கணுமா? இது நல்ல விஷயம் மேடம்." என்றான் படுவேகமாய்.

மஞ்சுளாவிடம் சரேலென்று ஒரு நிமிர்வு.

புருவத்திலும் ஒரு சின்ன வளைவு. பார்க்கும் தோரணையே 'அது என்ன நல்ல செய்தி?' என்று கேட்காமல் கேட்டது.

"அவங்க சொந்த கிராமத்துல குலதெய்வத்துக்கு பூஜை போடப் போறாங்களாம். சாரோட அப்பா உடனே கிளம்பி வரச் சொல்லியிருக்காரு!"

மஞ்சுளா உடனேயே ஒரு தெற்றுச் சிரிப்பு சிரித்தாள்.

"எதுக்கு சிரிக்கிறீங்க?"

"இல்ல இதுக்கெல்லாம் போய் தந்தி கொடுத்திருக்காங்களே! அதை நினைச்சு சிரிச்சேன்."

"ஏன் மேடம்... உங்களுக்கு இதுல எல்லாம் நம்பிக்கை இல்லையா?"

"எதுல?"

"இல்ல.. இந்த குலதெய்வத்தை வழிபடுறதா சொன்னேனே அதுல..."

மஞ்சுளா பதிலுக்கு உதட்டைச் சுழித்தாள்.

"எனக்கு கோவில் தெய்வத்து மேலேயே நம்பிக்கை கிடையாது-இதுல குலதெய்வம், குலமில்லாத தெய்வங்கறதெல்லாம் சுத்த ஹம்பக்!"

அநாயசமாய் சொல்லிவிட்டு ஹியர்போனில் 'சதர்ன் இன்டஸ்ட்ரீஸ்' என்று ஆபீசுக்கு வந்த ஒரு போன் காலுக்கு பதில் சொல்லத் தொடங்கினாள். கணபதி ஒரு சின்ன ஆச்சரியத்தோடு அவள் பதிலுக்காக சிரித்தபடி அங்கிருந்து விலகினான்.

மஞ்சுளாவும் வேலையில் மும்முரமானாள்.

முப்பது வயதைத் தொட்டுவிட்டாள். பார்க்கவும் மும்தாஜ் மாதிரி கும்மென்றுதான் இருக்கிறாள். ஆனால் இன்னும் கல்யாணம்தான் ஆகவில்லை.

ஆள் களையாகவும் சுளையாகவும் இருப்பதால் ஆபீசில் நிறைய பேர் ஜொள்ளுவிட்டார்கள். ரமேஷ் என்கிற மார்கெட்டிங் ஜூனியர் அசிஸ்டென்ட் ஒருவர்கூட 'உடல் மண்ணுக்கு-உயிர் மஞ்சுளாவுக்கு' என்று லவ்லெட்டரெல்லாம் எழுதினான்.

அவளுக்கும் ரமேஷை பிடித்திருந்தது.



அவனோடு சேர்ந்து கொண்டு கொஞ்சநாள் ஊர் சுற்றினாள். ஆனால் இடையில் என்னவாயிற்றோ? அவன் இப்பொழுது மஞ்சுளா என்றாலே பின்டேலன் பேரைக் கேட்ட மாதிரி நடுங்குகிறான். அவள் பக்கமே யாரும் திரும்புவதில்லை.

கேட்டால் அவள் ராசியே ஒரு வினோத ராசி என்று குசுகுசுக்கிறார்கள். மஞ்சுளாவும் 'போங்கடா ஜாட்டான்களா...' என்று தலை முடியை ஒதுக்கிவிடுகிற மாதிரி அவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டாள்.

இருந்தும் உள்ளுக்கு ஒரு ஏக்கம் அவளுக்கு இல்லாமல் இல்லை. இப்பொழுது ஆபீசில் அவளுடன் சகஜமாய் பேசும் ஒரே நபர் பாண்டியன் மட்டும் தான். அவளுக்கும் கண்ணியமான அவனது அணுகுமுறை மிகப் பிடித்திருந்தது. அதுவே மெல்ல ஒருதலைக் காதலாக துளிர்க்க ஆரம்பித்துவிட்டது.

அதனாலேயே அவன்மேல் எப்பொழுதும் ஒரு பார்வை... ஆனால் ஐ லவ் யூ சொல்லத்தான் துணிவில்லை. மேனேஜராயிற்றே...? சீட்டை கிழித்துவிட்டால்...?

லஞ்ச் டைம்!

எல்லோரும் கேன்டீன் ஹாலில் அரட்டையில் இருந்தார்கள். மஞ்சுளா மட்டும் சீட்டை விட்டு நகரவில்லை. நகரவும் கூடாது. லஞ்ச் டைமுக்கு முன்போ, பின்போ அவள் யாரிடமாவது தன் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு போகலாம். அப்பொழுதுதான் பாண்டியனுக்கும் சாப்பாடு வரும். பக்கத்திலேயே இருக்கிறது அம்மாமி மெஸ். அங்கே இருந்து ஒரு கேரியரில் வந்து விடும். கணபதிதான் அதை அறைக்குள் கொண்டு போய் வைத்து விட்டு வருவான்.

இன்றும் கேரியர் வந்தது. ரிசப்ஷனை ஒட்டி கேரியரையும், சுருட்டிய வாழை இலையையும் வைத்துவிட்டு போய்விட்டான் மெஸ்காரன்.

ஆனால் கணபதிதான் வந்து கேரியரை எடுத்துச் செல்லவில்லை. மஞ்சுளாவிற்கு பரபரவென்றிருந்தது. சரியாக ஒண்ணரைக்கெல்லாம் பாண்டியன் சாப்பிட்டு முடித்து விடுவான். கணபதி வராததால் மஞ்சுளாவே கேரியரை கையில் எடுத்தாள்.

அதற்கு அவசியமில்லை என்கிற மாதிரி பாண்டியனே தன் அறையில் இருந்து வெளியில் வந்தான். வரும்போதே கையில் பிரீஃப்கேசுடன் வந்தான்.

"எக்ஸ்க்யூஸ் மீ சார்... உங்களுக்கு சாப்பாடு வந்து காத்துகிட்டிருக்கு...

"எனக்கு இன்னிக்கு லஞ்ச் வேண்டாம் மஞ்சு. வேணும்னா நீ சாப்ட்டுடு. இல்ல கணபதி எடுத்துக்கட்டும். நான் இப்ப லீவுல போறேன். வர நாலு நாள் ஆகும். எந்த ஒரு இம்பார்ட்டன்ட் மெசேஜையும் மிஸ் பண்ணாம அசிஸ்டெண்ட் மேனேஜர் அழகப்பனுக்கு கொடுத்துடுங்க. நான் வந்து பாத்துக்கறேன்..." -பாண்டியன் மென்மையாக சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

"சார் சாப்ட்டு போகலாமே...?" -இடை மறித்தாள் மஞ்சுளா.

"நோ மஞ்சு... அப்புறம் கார் ஓட்ட முடியாது. தூக்கம் வந்துடும்.

"எங்க சார் போறீங்க...?"

"ஓ... உன்கிட்ட சொல்லலையா.. நான் சரவணம்பட்டி-தட்மீண்ஸ் என் வில்லேஜுக்கு போறேன். சிவகங்கை பக்கத்துல இருக்கு. ஒரு டொமஸ்டிக் ஃபங்ஷன். அட்டெண்ட் பண்றதுக்காக போறேன். பை!"

-கையை ஆட்டிவிட்டு அவன் விலக, அவன் ஸ்டைலாக நடப்பதையே பார்த்தபடி சற்று மெய் மறந்தாள் மஞ்சுளா.

அப்படியே பார்வை திரும்பி கேரியர் மேல் சென்றது.

அவனுக்காக வந்த சாப்பாடு. அவனே சாப்பிடவும் சொல்லிவிட்டான்.

கச்சிதமாக மகாலட்சுமி என்கிற அசிஸ்டென்ட் சாப்பிட்டுவிட்டு ஆடி அசைந்தபடி வந்து கொண்டிருந்தாள்.

அவளைக் கூப்பிட்டு போர்டிகோவில் உட்காரவைத்துவிட்டு ளெம்பினாள்.

"என்னம்மா. மேனேஜர் சாப்பாடு இன்னிக்கு உனக்கா.?"

"ஏண்டி... உனக்கு பொறாமையா இருக்கா? சார் லீவுல போறார். அதான் எனக்கு தள்ளி விட்டுட்டார்."

"அனுபவி..."

மகாலட்சுமி சொல்லிக் கொண்டே ரிசப்ஷன் போர்டில் உள்ள சுழல் நாற்காலியில் போய் அமர்ந்தாள். ரிசீவர் போனையும் எடுத்து காதில் மாட்டிக் கொண்டாள். கச்சிதமாக ஒரு செய்தி.

"திஸ் ஈஸ் சதர்ன் இண்டஸ்ட்ரீஸ்?"

"யெஸ்...ஹூ ஈஸ் ஸ்பீக்கிங்?"

"என் பேர் அகல்யா. மிஸ்டர் பாண்டியன் இருக்காரா?"

"நோ மேடம்... ஹி வென்ட் ஆன் லீவ்!"

“லீவ்?”

“ஆமாம்... இப்பதான் கிளம்பிப் போறார். எனி இம்பார்ட்டண்ட் மெசேஜ்?”

“நல்ல தெரியுமா... அவர் கிளம்பிட்டாரா...?”

“ஷ்யூர் மேடம்...”

“செல்போன் நம்பர் கிடைக்குமா?”

“சாரி... அவர் செல்போன் வெச்சுக்கலைன்னு நினைக்கிறேன்.”

“சரி எங்க போறார்?”

“ஐ டோன்ட் நோ. சாரி ப்ளீஸ்...”

-மகாலாட்சுமி போனை உடனே கத்தரித்தாள். கொஞ்சம் பெருமூச்சு விட்டாள். இல்லேன்னாவிடாம செல்போன் இருக்கா... எங்க போறாருன்னு நோண்டினா எனக்கென்ன தெரியும். அதை எல்லாமா ஒரு மனுஷன் சொல்லிட்டு போவார். இடியட் -என்று முணுமுணுக்கவும் மறுபடியும் காதில் பாயத் தொடங்கினாள் பார்கவி.

“என்னது... நான் கேட்டுகிட்டிருக்கும்போதே போனை கட் பண்ணிட்டீங்க. ஐ வான்ட் டு நோ. ஃஅவர் எங்க போனார்னு எனக்குத் தெரியணும்.”

“தெரியாது மேடம். அதெல்லாம் அவர் பர்சனல். எப்படி எனக்கு தெரியும்?”

“சரி எத்தனை நாளைக்கு லீவு போட்டிருக்கார்...?”

“நோ...திஸ் ஈஸ் டூ மச். அவரை பத்தி இவ்வளவு கேக்கற நீங்க யார்?”

“நான் அவரோட உட் பீ... ஐ மீன வருங்கால மனைவி.”



“இருக்கலாம். ஆனா எனக்குத் தெரியாத விஷயத்தை பத்தியே நீங்க கேக்கறீங்க. நான் என்ன பண்ண முடியும்?”

‘ஓ.கே... ஓ.கே... அப்புறமா நான் பேசிக்கறேன். சாரி... சாரி...” -மறுமுனை முடங்கியது.

மகாலட்சுமியும் அப்பாடா என்றபடி சற்று பின்னால் சாய்ந்தாள்.

திரும்பவும் காதில் தொலைபேசி அழைப்பு.

“சதர்ன் இண்டஸ்ட்ரீஸ்...”

“மிஸ்டர் பாண்டியன் இருக்காரா?”

“அவர் லீவுல போயிருக்கார் சார்...”

“அப்படியா...? லீவு போட்டுட்டு ஊருக்குக் கிளம்பிட்டாரா?”

“அதெல்லாம் எனக்குத் தெரியாது.”

-மகலாட்சுமி எரிச்சலுடன் சொன்ன மறுநொடி மறுமுனையில் பேசியவரிடம் பதட்டம்.

“ப்ளீஸ் மேடம் ஒரு முக்கியமான விஷயம். வெரி சீரியஸ். ஆபீஸ்ல யார் கிட்டையாவது கேட்டாவது சொல்லுங்களேன் அவர் ஊருக்குத்தான் போயிருக்காரான்னு...’

“மே பீ... அவர் ஊருக்குத் தான் போயிருக்கார்னு நினைக்கறேன். என்ன சார் இப்போ?”

“சரி. போய் எவ்வளவு நேரமிருக்கும்...?’

“ஒரு அரைமணி இருக்கலாம். இதை எல்லாம் கேட்டு என்ன பண்ணப்போறீங்க?”

"நான் ஒரு ஆபத்தை தடுக்க நினைக்கறேன். பாண்டியன் அவர் ஊருக்கு போகக்கூடாதும்மா. சரி நான் பாத்துக்கறேன். தேங்க் யூ ஸோ மச்!"

-மறுமுனையில் பேசியவர் யார் என்றே சொல்லாமல் போனை வைத்தார்

மகாலட்சுமி உதட்டில் முணுமுணுப்பு.

"ஊருக்கு போனா ஆபத்தா...? என்ன ஆபத்து?"

## 2

மிகச் சரியாக 292 வருடங்களுக்கு முன்...

இராமநாதபுரத்தையும் அதைச் சார்ந்த சேர நாட்டையும் கட்டி ஆண்டு வந்த கிழவன் சேதுபதியின் அரண்மனையான இராமலிங்க விலாசத்தினுள் நுழைந்து கொண்டிருந்தார், ஒரு மொகலாய பட்டு வியாபாரி.

நுழைவாயிலேயே அவர் வருகையை உத்தேசித்துக் காத்திருந்தார், அரண்மனைக் கணக்காயர். வியாபாரி வரவும் ஆனந்தமாய் நமஸ்காரம் சொல்லி உள்ளே அழைத்துச் செல்லத் தொடங்கினார். வியாபாரி ஒன்றும் சாதாரணமாய் கையை வீசிக்கொண்டு வந்துவிடவில்லை. திண்டுத் திண்டாய் பட்டு வஸ்திர மூட்டைகள். அவைகளைத் தாங்கியபடி வரும் ஒரு கூரை வேய்ந்த குதிரை வண்டி, அத்தோடு அந்த வண்டியில் பட்டுக்களுடன் அமர்ந்து வரும் உதவியாளர்கள் ஒரு நான்குபேர் என்று ஒரு வர்த்தக் கூட்டமே இராமலிங்க விலாசத்தினுள் நுழைந்தது.

வியாபாரியைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர் ஒரு ராவுத்தர் என்பது தெரிந்துவிட்டது. தலையில் ஒரு வலைநூல் குல்லாய், தாடையில் மிக நீண்ட தாடி.



ஜெர்வானி ரகத்தில் உடுப்பு, காலிலும் காபூல் தோல் செருப்பு என்று அந்த வியாபாரி அப்பட்டமான ஒரு வடக்கத் தியராகத்தான் தெரிந்தார்.

அரண்மயைின் சவுக்கைப் பகுதிக்கு அவர் வரவும் அங்கு வள்ளல் சீதக்காதி நின்று கொண்டிருந்தார்.

சேதுபதி சமஸ்தானத்தின் அமைச்சர்!

வியாபாரியைப் பார்க்கவும், "வாருங்கள் ஹிதாயத்! வரவேண்டும்! வரவேண்டும்!" - என்று மார்போடு கட்டித் தழுவி முகமன் கூறி வரவேற்றார்.

அப்பொழுதுதான் அந்தப்பட்டு வியாபாரியின் பெயர் ஹிதாயத் என்பதும், அவரை அமைச்சராகி சீதக்காதியே ராஜமரியாதையோடு அழைப்பதால் மிகப்பெரிய வர்த்தகராகத்தான் இருக்கவேண்டும் என்பது ருசுவாயிற்று.

ஆங்காங்கே காவலர்கள் நின்றபடி இருந்தனர். சிலர் பாரா போய்க் கொண்டுமிருந்தனர். நாழிகைக் கணக்காளன் அவன் அருகில் இருந்த 'நாகரா'வில் அப்பொழுது பார்த்து பன்னிரெண்டு தட்டு தட்டி அப்போதைய மணிப்பொழுது பன்னிரெண்டு என்று அறிவிக்கவும்...

"சரியாக உச்சிப் பொழுதுக்கு வந்திருக்கிறீர்கள்." என்று முகம் மலரப் பேசியபடியே அரண்மனைக்குள் இட்டுச்செல்லத் தொடங்கினார் வள்ளல் சீதக்காதி.

செல்லும் வழித்தடத்தில் இருவரிடமும் உசாவல்!

"பயணமெல்லாம் எப்படி இருந்தது?" -இது வள்ளல்.

"அல்லாவின் பெருங்கருணையால் ஒரு குறையுமில்லை வள்ளலே" -என்றார் பதிலுக்கு ஹிதாயத்.

“நல்லது... வரும் வழியில் ஏதும் இடர்பாடுகள் இல்லையே...?”

“ஏதுமில்லை... அங்கங்கே அன்ன சத்திரங்கள் குளிர்சோலைகள். நான் நமாஸ்புரியவும் பங்கமில்லை. நமது தொழுகைக் கூடங்களையும், மசூதிகளையும் நிறைய இடங்களில் பார்த்தேன்.”

“மகிழ்ச்சி... இந்த முறை உங்கள் வஸ்திர வியாபாரமெல்லாம் எப்படி?”

“நல்ல வியாபாரம்-பாண்டிய நாட்டிலேயே பாதிக்குமேல் எனது சரக்குகள் விலை போய்விட்டன!”

“அப்படியா...? மதுரை அரண்மனையில் ஏதும் வாங்கினார்களா?”

“நிறைய்ய... அரசி மங்கம்மாள் நேரிலேயே வந்து எனது சரக்குகளைப் பார்த்து அதில் இருந்து பல பட்டுச் சேலைகளைத் தேர்ந்தெடுத்தார். அத்துடன் ரத்தினக் கம்பளங்களையும், கம்பள விரிப்பு, துகிலாடைகள் என்று பலவற்றையும் வாங்கினார். சுருக்கமாய் சொல்வதானால் இருபதாயிரம் பொன்னுக்கு எனக்கு பாண்டி நாட்டிலேயே வர்த்தகம் முடிந்துவிட்டது.”

“ஓ... இந்த முறை வியாப்பாரம் அமோகம் என்று சொல்லுங்கள்.”

“நிச்சயமாய்... அது சரி. டெல்லியில் உங்களை சந்தித்த பிறகு இங்கு தான் சந்திக்கிறேன். எப்படி இருக்கிறீர்கள்?”

“எனக்கென்ன குறை? எங்கள் அரசர் கிழவன் சேதுபதி என்னை உள்ளங்கையில் வைத்துத் தாங்குகிறார். அல்லாவின் பெருங்கருணையும் எனக்கு பேருதவி செய்து கொண்டிருக்கிறது.”



“ஆஹா... கேட்கவே ஆனந்தமாய் இருக்கிறது. உங்களுக்காகவே முந்நூறு பட்டுத் துண்டுகளைக் கொண்டு வந்திருக்கிறோம்.”

“மகிழ்ச்சி... இங்கே அரண்மனையில் உங்கள் வியாபாரம் முடியட்டும். அதன்பின் என் இல்லத்திற்கு வாருங்கள். இன்று மாலை நோன்பிருக்கும் நமது ஏழை ஜனங்களுக்கு அந்தத் துண்டுகளை நான் பரிசாகத் தர விரும்புகிறேன். நீங்களே உங்கள் கைகளால் அதை வழங்கலாம்.”

“என்ன வள்ளலே...? வியாபாரியையும் உங்கள் பெரும் உதாரகுணத்தால் வள்ளலாக்கப் பார்க்கிறீர்களே? பொன்னைக் கொடுத்து பொருளை வாங்கும் நீங்களே தானமாய் தருவது தான் நல்லது. கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது நல்லதல்லவே.”

“பரவாயில்லையே... இந்த மண்ணின் பழமொழி எல்லாமும் உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே...”

“நான் பல ஊர் சுற்றும் வியாபாரி. எல்லா விஷயங்களையும் தெரிந்து வைத்திருந்தால்தானே இணக்கமாய் பேசி வியாபாரம் செய்ய முடியும்?”

-வள்ளலும், அந்த வியாபாரியும் நட்புடன் பேசிக்கொள்வதில் இருந்து அவர்கள் இருவருக்கும் இடையே ஆழமான நட்பு இருப்பதும், அந்த வியாபாரியும்கூட ஒவ்வொரு நாடாகப் போய் வர்த்தகம் புரிபவர் என்பதும் தெரியலாயிற்று.

அவர்கள் நடையும்கூட அரண்மனையின் விருந்தினர் அறை முன் முற்றுப்பெற்றது.

“ஹிதாயத்! நீங்கள் இங்கே தங்கியிருங்கள். எங்கள் அரசரின் பத்தினியார் சிறிது நேரத்தில் உங்களை வந்து சந்திப்பார். அவர் மிகுந்த கலைரசனை உடையவர். ஆகவே

நல்ல உயர்ந்த ரகப்பட்டுக்களை அவரிடம் காட்டுங்கள். பிடித்து விட்டால் அவ்வளவையும் வாங்கிவிடுவார்...."

"மதுரை ராணி மங்கம்மாளைப் போல என்று சொல்லுங்கள்.

"எனக்கு மங்கம்மாளைப் பற்றி தெரியாது. ஆனால் எங்கள் ராணியார், மங்கம்மாளின் ரசனைக்கு சளைக்காதவர்-இதை நீங்களும் பார்ப்பீர்கள்."

"வள்ளல் விளக்கமளிக்கும் போதே கட்டியக் குரல் ஒலிக்கத்தொடங்கிவிட்டது.

"பராக்க்க்...!

ராணி மாதேவி கதலி நாச்சியார் பராக்...

சர்வ விசேஷ மங்களானந்த ரூபிணியார்

மறவர் குலத்து மாமணி கதலி நாச்சியார்

பராக்... பராக்...!"

-குரல் அனைவரையும் நிமிர்த்தியது. ஒருவித பரபரப்பு அங்கே பரவ ஆரம்பித்தது. சற்றே தளர்ந்தபடி இருந்த காவல் வீரர்கள் விரைப்பாக, இரண்டு சேடியப் பெண்களுடன் கதலி நாச்சியார் என்னும்-அந்த அரண்மனையின் - ராணியும் அங்கே விஜயம் செய்தபடி இருந்தாள்.

வியாபாரி ஹிதாயத்தும் ராணியைப் பார்த்து முதுகை வளைத்து கையை உயர்த்தி உதட்டருகே கொண்டு சென்று 'நமஸ்தே மாதாஜி... நமஸ்தே..." என்று வடக்கத்திய பாணியில் வணக்கம் சொன்னார்.

வள்ளலும் "வரவேண்டும் சகோதரி....' என்றார் புன்னகையோடு.



"என்ன அண்ணா... உங்கள் வியாபாரி என்ன சொல்கிறார்?" -என்று வாஞ்சையுடனும் மரியாதைக்குரிய உறவு முறையுடனும் விசாரிக்கலானாள் கதலி.

"இந்த முறை அமோக வியாபாரமாம். சந்தோஷமாய் இருக்கிறார்..."

"அப்படியா சேதி..."

"ஆமாம்... மதுரையில் மங்கம்மாதேவியாரே நேரில் வந்து பட்டு வஸ்திரங்களையும், ரத்தினக்கம்பளங்களையும் வாங்கியிருக்கிறார், என்றால் பார்த்துக் கொள்ளேன்."

"அப்படியானால் நான் பார்த்து எடுக்க ஏற்ற வஸ்திரம் இருக்காது என்று சொல்லாமல் சொல்கிறீர்களா?"

-கதலி விருந்தினர் அறையில் ஆசனம் ஒன்றில் அமர்ந்தபடி கேட்ட கேள்வியில் ஆழ்ந்த உள்ளார்த்தம்.

"அப்படியெல்லாம் இல்லை ராணி. உங்களுக்கென்று ஒரு மூட்டையை நான் தனியே ஒதுக்கிவிட்டேன். அதில் உஜ்ஜயினிப் பட்டும், காசிப்பட்டும், சீனத்து வண்ண மேலாடைகளும் நிறையவே உள்ளன. எனவே அந்த நாட்டு ராணியார் முந்திக்கொண்டார் என்கிற கவலையே உங்களுக்கு வேண்டாம்" -என்றபடி ஹிதாயத் தன் சகாக்களைப் பார்க்க, அவர்கள் தாங்கள் சுமந்து வந்திருந்த பட்டுக்களை ராணியின் எதிரில் அவிழ்க்கத் தொடங்கினார்.

ராணி கதலி நாச்சியின் கண்களில் ஆர்வமும், ஆசையும் கொப்பளிக்கத் தொடங்கியது. வியாபாரி ஹிதாயத்தின் சகாக்களும் வரிசையாக தங்கள் கொண்டு வந்த புடவைகளையும், மேலாடைகளையும், கம்பளங்களையும் எடுத்து மளமளவென்று விரித்து ராணி எதிரில் பரத்தத் தொடங்கினர்.

ஒவ்வொரு புடவையுமே மிக அழுத்தமாய் ஜரிகை மின்ன கண்களைப் பறித்தன. ஒன்றில் மயில்தோகை விரித்த மாதிரியான வேலைப்பாடு... இன்னொன்றில் அன்னப்பட்சிகள் பறப்பது போன்ற வேலைப்பாடு. அடுத்ததில் மேகத்திடையே நிலா பாதி மறைந்தும் மறையாதது போன்ற வேலைப்பாடு. அதன்பின் மாங்கனி, வண்ணத்தாமரை என்று ஏராளமான வகைகள்.

ராணியின் முகம் அவ்வளவையும் பார்த்து மத்தாப்பைப் போல மலர்ந்தது.

"ஆஹா... அற்புதம்! என்னால் எதையும் வேண்டாம் என்று கூறமுடியாது. அவ்வளவு அழகாக இருக்கிறது." என்று ஒரு குயிலின் குரலில் கூவினாள் கதலி.

மொத்தத்தில் எல்லாவற்றையும் விரித்து போட்டுவிட்டனர் சகாக்கள். ஆனால் ஒரு சிறிய மரப்பெட்டியை மட்டும் திறக்காமல் அப்படியே வைத்திருந்தனர். அதுமட்டும் கதலியை என்னவோ செய்தது.

"ஆமாம்... அதில் என்ன இருக்கிறது?" -பெட்டியைக் காட்டிக் கேட்டாள்.

"அதில்கூட ஒரு புடவைதான் இருக்கிறது ராணி. ஆனால் அது சற்று பின்னப்பட்டு விட்டது. எனவேதான் அதைக் காட்டவில்லை!"

"பின்னப்பட்ட புடவையா... எங்கே காட்டுங்கள் பார்ப்போம்."

"வேண்டா ராணி. பின்னமானதை நாங்கள் விற்பனை செய்ய மாட்டோம்."

"அதுசரி... நான் பார்க்கத்தானே ஆசைப்படுகிறேன். அத்துடன் அதை ஏதோ தங்கம் வைரம் போல ஒரு மரப்பெட்டியில் போய் மூடி வைத்திருப்பது தான் ஆச்சரியமாக உள்ளது."



"காரணம் இருக்கிறது. அது நீங்கள் கூறியது போல தங்க இழை கொண்டு மிகவும் சிரமப்பட்டு நெய்யப்பட்ட தங்கஇழைப் புடவை! ஊடே வேலைப்பாடுகளில் வைரக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வைரமும் ஜாதி வைரம்!"

"என்னது? தங்க இழைப் புடவையா? நான் கேள்விப்பட்டதில்லையே...?"

"வடக்கில் ராஜபுத்திர வம்சத்தை சேர்ந்த அரசுப் பெண்கள் இந்த மாதிரி புடவைகளை விலையைப் பார்க்காமல் நெய்து தரச் சொல்வார்கள். இதற்காக தோலா தோலாவாய் தங்கமும் தருவார்கள். அதை உருக்கி இழைகளாய் தட்டி நீட்டி மிகக் கவனமுடன் நெய்த புடவை அது. தீபாவளி நாளில் அதை அணிந்து கொண்டு வழிபாடுகள் செய்தால் செல்வம் பெருகும் என்பது அவர்கள் நம்பிக்கை!"

"அப்படியா...! எங்கே அதை முதலில் காட்டுங்கள் பார்ப்போம்..." -ராணி கதலி நாச்சி பரபரத்தாள். வியாபாரி ஹிதாயத்தும் அந்தப் பெட்டியைத் திறந்தார்.

## 3

மணி இரண்டரை!

சாப்பிட்டு முடித்துவிட்டு ரிசப்ஷன் சீட்டுக்கு வந்தாள் மஞ்சுளா. பரபரப்போடு காத்திருந்தாள் மகாலட்சுமி.,

"மஞ்சு... ஒரு முக்கியமான விஷயம்."

"என்ன மகா ... G.M. போன் பண்ணினாரா...?"

"இல்ல மஞ்சு... யார்னு தெரியில... பாண்டியன் சாரைப பத்தி கேட்டாங்க. லீவுல போயிருக்கார்னு சொன்னேன். எப்ப போனார்... சொந்த ஊருக்கான்னு விடாம கேட்டாங்க. எனக்கு எரிச்சலாயிடிச்சு. அதே சமயம் அந்த பக்கமா அவர் ஊருக்கு போகக் கூடாதே... ஆபத்தாச்சேன்னாங்க. எனக்கு ஒண்ணும் புரியலடி."

- மகா சற்று விஸ்தாரமாகவே விளக்கினாள்.

"ஆபத்தா...? என்ன ஆபத்து...? யார் அது?"

"தெரியல. யார்னு நான் விசாரிக்கிறதுக்குள்ளே போனை வெச்சுட்டாங்க."

"என்னடி குழப்பறே...? ஏதாவது முக்கியமான தகவலா இருந்து அதை நான் சொல்லத் தவறிட்டா பாண்டியன் கோபப்படுவார் மகா..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. காதுல விழுந்ததை சொல்லிட்டேன். இனி நீயாச்சு. அவராச்சு. ஆளை விடு" -மகாலட்சுமி கழண்டு கொண்டாள். மஞ்சுளாவிற்கு குடைய ஆரம்பித்தது.

'யாராக இருக்கும்? அது என்ன ஆபத்து...?'

- அவள் கேள்விக்குள் விழவும் மகாலட்சுமி போன வேகத்தில் திரும்பி வந்தாள்.

"மஞ்சு... இன்னொரு விஷயம். பாண்டியன் சாரோட உட்பியும் பேசினாங்க."

"உட்பியா?"

"ஆமா. அப்படித்தான் சொன்னாங்க. அவங்களும் 'பாண்டியன் எங்கே? செல் நம்பர் இருக்கா?'ன்னு துளைச்சு எடுத்துட்டாங்க."



-மீண்டும் மகா விலக, மஞ்சுளா முகத்தில் ஏகத்துக்கும் படபடப்பு.

'முதலில் ஆபத்துச் செய்தி. அடுத்து உட்பியைப் பற்றிய செய்தி... என்ன இது? எல்லாமே அதிர்ச்சியானதாக இருக்கிறதே....'

மஞ்சுவின் இதயம் விம்மத் தொடங்கியது.

கண்டங்கழுத்து வியர்த்து நடுமார்பில் பாதை போட்டுக் கொண்டு ஒழுகியது.

பாண்டியனின் கார் செங்கல்பட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. நல்லவேகம். ஸ்டீரியோவில் அந்த நாளைய முகம்மது ரஃபியின் பாடல் கசிவு. தில் க்யா கரே...

எதிர்வரும் கார்களையும், பஸ்களையும் ஒதுக்கி ஓரம் கட்டியபடி அவனும் காற்றை கிழித்துக் கொண்டிருக்கும் போது 'பார்க்வா ஏஜென்சிஸ்' என்கிற பெயருடன் ஒரு மினிவேன் ஒன்று அவனது காரைத் தாண்டிப் போனது.

அப்பொழுதுதான் அந்த நிறுவனத்துக்கு சதர்ன் இன்டஸ்ட்ரீஸ் என்னும் அவனது நிறுவனம் அனுப்ப வேண்டிய முக்கியமான டெண்டர் பேப்பரின் ஞாபகம் வந்தது.

கிளம்பும் அவசரத்தில் அதைப் பற்றிய குறிப்பை எழுதி வைக்காமல் வந்ததும் ஞாபகமாய் ஞாபகத்தில் வர, நாக்கைக் கடித்துக் கொண்டான். அடுத்த நொடியே ஏதாவது STD பூத் கண்ணில் படுகிறதா என்று பார்க்க ஆரம்பித்துவிட்டான்.

ரூபாய்க்கு பத்து பொருள் மாதிரி STD பூத்கள் தான் ஐம்பது அடிக்கு ஒன்று வந்துவிட்டதே...! மளுக்கென்று ஒரு பூத் கண்ணில் பட்டது.

காரை ஒதுக்கிவிட்டு இறங்கினான். பூத்துக்குள் நுழைந்து எண்களைத் தட்டி மஞ்சுவைப் பிடித்தான்.

"மஞ்சு... நான் பாண்டியன் பேசறேன்."

"சொல்லுங்க சார்..."

"பார்கவா ஏஜென்சிக்கு அனுப்ப வேண்டிய ஒரு டெண்டர் பேப்பர் என் டேபிள் மேல இருக்கு. அதை இன்னிக்கே கொரியர் பண்ணிடுங்க."

"ஷ்யூர் சார்... அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்."

"என்ன?"

"இப்ப நீங்க எங்க இருந்து பேசறீங்க?"

"செங்கல்பட்டுக்கு முன்னால ஒரு பப்ளிக் பூத்ல இருந்து, என்ன விஷயம் மஞ்சு?"

"இரண்டு பேர் போன் பண்ணாங்க. ஒருத்தர் உங்க உட்பின்னாங்க. அடுத்தவர் யார்னு தெரியல. நீங்க ஊருக்கு போனா ஆபத்துன்னார்."

"ஐ. சி. ஆமாம். பேரைச் சொன்னாரா?"

"இல்ல சார். மகாதான் அட்டெண்ட் பண்ணா... நான் சாப்பிடப் போயிட்டேன்."

"ஓ.கே. நான் பாத்துக்கறேன்." – பாண்டியன் மஞ்சுளை கட்செய்துவிட்டு வெளியில் வந்தான். தாடையைத் தடவ ஆரம்பித்தான். பிறகு என்ன நினைத்தானோ திரும்பவும் பூத்தை நெருங்கினான். ரிசீவரை எடுத்து எண்களைத் தட்டினான்.

"அகல்யா..."

"யார்... பாண்டியனா?"



"பாண்டியனேதான். ஆபீசுக்கு போன் பண்ணியா?"

"ஆமாம். ஊருக்கு கிளம்பிட்டதா சொன்னாங்களே."

"ஊருக்குதான் போய்கிட்டிருக்கேன். எதுக்கு போன் பண்ணே?

"முக்கியமான விஷயம் பாண்டியன். உங்க ஜாதகத்தை யும் என் ஜாதகத்தையும் அப்பா பார்த்தார். நீங்க பெரிய ஆபத்துல சிக்கிக்கப் போறீங்கன்னு ஜோசியர் சொன்னாராம்."

"அப்படியா?"

"என்ன பாண்டியன்– சாதாரணமா அப்படியான்னு கேக்கறீங்க. இதை உங்களுக்கு சொல்றதுக்காக அப்பாவே கூட போன் பண்ணினாராம்..."

"ஆமா... அந்த ஜோசியர் என்ன பெரிய கடவுளா?"

"அப்படி இல்ல பாண்டியன். அவர் சொன்னா சொன்னதுதான்னு அப்பா சொல்றார். நீங்க ஊருக்கு போறதா இருந்தா போகாதீங்க பாண்டியன்."

"ஸ்டுப்பிட் மாதிரி பேசாதே. ஆபத்து ஊருக்குப் போனாதான் வருமா? இங்க இருந்தா வாராதாக்கும்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்க போக வேண்டாம். ப்ளீஸ்..."

"திரும்பவும் சொல்றேன். ஸ்டுப்பிட் மாதிரி பேசாதே. நான் போறது எங்க வீட்டு விசேஷத்துல கலந்துக்க... ஞாபகம் வச்சுக்கோ..."

"அதையும் அந்த ஜோசியர் சொன்னார். அந்த விசேஷத்துலதான் ஆபத்தே இருக்காம்."

"புடலங்கா... ஆமா நான் இப்ப போன் பண்ணிப் பேசலேன்னா என்ன பண்ணியிருப்பே?"

"உங்க ஊருக்கே கிளம்பி வந்துருப்பேன்."

-அகல்யா என்கிற அந்தப் பெண் அசாத்ய ஒரு அதிர்ச்சியை அளித்தாள்.

"அம்மா தாயே! அப்படி ஏதாவது வந்துகிந்து வெச்சு நம்ம காதலைப் போட்டு உடைச்சிடாதே. அப்புறம் எல்லாமே கெட்டுடும்."

"இதையே எத்தனை நாளைக்கு சொல்வீங்க. என்னிக்காவது ஒருநாள் தெரிஞ்சுதானே தீரணும்?"

"அது எனக்கும் தெரியும். அது என்னிக்குன்னு நான்தான் முடிவு பண்ணணும்."

"மண்ணாங்கட்டி. இப்படி சொல்லியே ஆறுமாசத்தை ஓட்டிட்டீங்க. எல்லா இடத்துலையும் காதலிக்கற பெண்கள்தான் இப்படி சொல்வாங்க. ஆனா இங்க பாரு எல்லாமே தலைகீழ்... என் வீட்ல தயாரா இருந்தும் நீங்க மக்கர் பண்றீங்க."

"அப்படி மக்கர் பண்ணலேன்னோ டேஞ்சர் ஆயிடும். உனக்கு மேனேஜர் பாண்டியனைத்தான் தெரியும். சரவணம்பட்டி காசிலிங்க சேதுபதி மகன் பாண்டியன் சேதுபதி யார், அவர் கடமை, பொறுப்புல்லாம் என்னன்னு உனக்குத் தெரியாது."

"அது யார் பாண்டிய சேதுபதி?"

"வேற யார்... நான்தான்!"

"சரி. அந்த பாண்டிய சேதுபதி என்ன... பெரிய கொக்கா?"



"கொக்குதான். நீ புரியாம பேசறே அகல்யா. என் குடும்பம் ஒரு ராஜ பரம்பரை. நிறைய கட்டு திட்டங்கள் உள்ள குடும்பம். எனக்குன்னு முறைப்பெண் ஒருத்தி இருக்கா. உனக்கு சொன்னா புரியாது. நான் நிறைய சமாளிக்க வேண்டியிருக்கு. புரிஞ்சுக்கோ அகல்யா..."

"போய்யா... நீயும், உன் காதலும், பயமா இருக்கு... எனக்கு இப்போ. அதுக்கு என்ன சொல்றீங்க?"

"பயமே படாதே. இந்த பாண்டியன் ஒரு சுத்த வீரன் எந்த ஆபத்தும் என்னை எதுவும் செய்துட முடியாது."

"பாண்டியன்... சொன்னா கேட்கமாட்டீங்களா? உங்க ஊருக்கு அடுத்த வாரம் போங்களேன்..."

"என் ஊருக்கு அடுத்த வாரமில்ல... நான் எப்ப வேணாலும் போகலாம். யாரோ ஒரு ஜோசியர் சொன்னதுக்காக நான் ஊருக்குப் போகாம விட்டுட்டா என்னைப் போல ஒரு பைத்தியக்காரனை பார்க்க முடியாதுன்னு ஆயிடும். ஓ. கே. பை!"

- ரீசிவரை வைத்துவிட்டு திரும்பினான். பணத்தைக் கொடுத்துவிட்டு வந்து காரைக் கிளப்பியபோது ஏனோ அது சண்டித்தனம் செய்தது.

'கெக்கரகெக்கரகெக்கர' என்று உறுமியது. ஸ்டார்ட் ஆவேனோ என்றது.

"ச்சே... என்ன ஆச்சு இந்த காருக்கு?" -முனகியபடி சாவியைத் திருகினான். காரிடம் சண்டித்தனம் தொடர்ந்தது. நெடுநேரம் வரை போராடிப் பார்த்துவிட்டு காரை விட்டு இறங்கினான்.

முன்னால் சென்று பானட்டைத் திறந்து எட்டிப் பார்த்தான். பளிச்சென்று ஒரு முக்கிய வயர் அறுந்து

தொங்கிக் கொண்டிருந்தது. ஆச்சரியமாகிப் போனது. 'இது எப்படி சாத்யம்?' - கேள்வி நெற்றியைப் பிய்த்தது!

இப்பொழுது என்ன செய்வது...?

## 4

பெட்டியைத் திறந்து வெளியே எடுக்கப்பட்ட அந்த தங்கப்புடவை ஜகஜ்ஜக வென ஜொலித்தது. நல்ல கனமும்கூட. கதலி நாச்சிக்கு ஏற்கனவே வண்டு விழிகள். அது படபடப்போது காதுவரை விரிந்தது.

"அடேயப்பா... என்ன ஒரு அழகு... அற்புதம்!" என்றாள்.

"ஆமாம் ராணி... தங்கம் என்றாலே அற்புதம் தானே? அதிலும் நேபாளத்து வைரங்கள் வேறு சேர்ந்து கொண்டால் கேட்கவா வேண்டும்." - என்றார் ஹிதாயத்.

"சற்று விரித்துக் காட்டுங்களேன்..."

"அதற்கென்ன... சலீம்! அதை பக்குவமாக விரித்து ராணியார் முன் பரத்து..." - ஹிதாயத்தின் கட்டளையைத் தொடர்ந்து அந்த புடவையை சரசரக்கும் ஒருவித சப்தத்துடன் நிதானமாய் விரிக்கத் தொடங்கினான் அவரது உதவியாளன்.

முற்றிலுமாய் விரித்தபோது பிரமிப்பு. நெஞ்சை அடைத்தது. பதினாறு முழ நீட்டம், ஆரம்பித்திலும் முடிவிலும் புசுபுசுவென்று குஞ்சரங்கள். நடுவில் வானத்தில் நட்சத்திரம் மின்னுகிற மாதிரி கடலைப் பருப்பின் கனபரிமாணத்தில் வைரப் பொட்டுகள்! அந்த வைரப் பொட்டுகளைச் சுற்றி மூலிகைச் சாயத்தால் பூக்களை வரைந்து பூவின் நடுவில் வைரம் ஒரு மகரந்தக் கண்ணி போல மின்னியது.



"இவை அசல் வைரங்களா?"

"அதிலென்ன சந்தேகம்? அவ்வளவும் நான் அந்நிய நாட்டு வியாபாரிகளிடம் வாங்கியவை..."

"இதை எப்படித் தறியில் பூட்டி நெய்தீர்கள்?"

"அதெல்லாம் தொழில் ரகசியம். இதன் பின்னே இருபது கலைஞர்களின் அயராத உழைப்பு இருக்கிறது. ஒரு நாள், இருநாள் அல்ல. பல மாதங்கள் இதற்காகவே அவர்கள் உழைத்துள்ளனர்."

"அற்புதம் அற்புதம்... இதன் மதிப்பு?"

"கேட்டால் உங்களுக்கு மயக்கமே வந்துவிடும்."

"அப்படியானால் லட்சம் பொன்னிருக்குமோ?"

"மீதம்?"

"நீங்களே சொல்லுங்களேன்."

"இதன் மதிப்பு மூன்று லட்சம் பொன். இதுகூட தோராயக் கணக்குதான்."

"சரி. இதில் ஏதோ பின்னம் இருப்பதாகக் கூறினீர்களே. அது என்ன?"

"பெரிதாக ஒன்றுமில்லை. இந்தத் தங்கப்புடவையில் நான் நவரத்தினங்களைப் பதிக்கவேண்டும். இப்பொழுது வைரம் ஒன்று மட்டுமே இதில் இருக்கிறது. நவரத்தினங்கள் இதில் சேர்ந்தால் இது பூஜைக்குரியதாகி விடுமாம். அல்லாத பட்சத்தில் இது வெறும் அந்தஸ்துச் சின்னம் மட்டும்தானாம். அதைத்தான் பின்னம் என்றேன்."

"அது எப்படி பின்னமாகும்? நவரத்தினங்கள் சேர்ந்தால் மதிப்பு கூடலாம். அவ்வளவுதான்... இப்பொழுது இருப்பதை எப்படி பின்னம் என்று கூறமுடியும்.

"சரி, பின்னம் இல்லை என்றே வைத்துக் கொள்ளுங்களேன்."

"அப்படி வாருங்கள் வழிக்கு... இதை ஒரு பெண்ணால் சாதாரணமாய் உடுத்திக் கொள்ளமுடியுமா?"

"நீங்கள் கண்டாங்கிக் கொசுவம் உடுத்தியிருப்பதைப் போல் மடக்கி வளைத்து செருகிக் கொள்வது சற்று சிரமம்தான். அப்படியே செய்தால் மேனி காற்று புகாமல் எரிச்சலுறும். ஆகையால் இதை ஒரு போர்வையைப் போல் போர்த்திக் கொண்டு பூசிப்பார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.

"உண்மையில் ராஜபுத்திரப் பெண்கள் வித்தியாசமான ரசனை உடையவர்கள்தான். ஒரு அணிகலனுக்கு இவ்வளவு மதிப்பைத் தருகிறார்களே...?"

"அங்கேதான் அவர்களின் செல்வாக்கு இருக்கிறது. அத்துடன் தங்கத்தையும் பட்டை வைரத்தையும் அவர்கள் சுக்ரனின் ஆதிபத்யமுடைய ஒரு சரக்காகக் கருதுவதால் அவர்கள் புரியும் பூஜைக்கு மிக அதிக பலன் கிடைக்கும் என்று கருதுகிறார்கள்.

'குறிப்பாக உடன்கட்டை ஏறும் சாதி மாதாக்கள் இதை ஈமக்கிரியைக்கு முன் அணிந்து கொண்டு பின் அதை தங்கள் சந்ததியர் வணங்குவதற்காக அளித்துவிட்டு சென்றுவிடுவார்கள். எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் இந்த புடவையும் பழுதில்லாமல் அந்த சதிமாதாக்களின் நினைவாக்வும், அவர்கள் ஆசியை சுமந்து கொண்டு மிருக்கும் என்று நம்புகிறார்கள்.

ஹிதாயத் உடன்கட்டை ஏறுவது பற்றி சொன்ன உடன் தான் கதலி நாச்சிக்கும் சேதுநாட்டு வழக்கம் நினைவுக்கு வந்தது.



நாடுகள் வேறாக இருந்தாலும் சுமங்கலிப்பெண்களின் பழக்க வழக்கங்கள் ஒன்றாகவே இருக்கின்றன. ராஜபுத்திர பெண்களைப் போலத்தான் சேதுநாட்டு மறவர்குலப் பெண்களும்...

கணவன் வீரசுவர்க்கம் அடைந்துவிட்டால் அவனைத் தொடர்ந்து, அவனது சிதையில் உடன்கட்டை ஏறிவிடுவார்கள். அந்த சதிமாதாக்களின் முகூர்த்தப் புடவையும் அவர்களின் தாலியும்தான் அதன்பின் சந்ததியர் வழிபடும் அவர்களின் நினைவாகும்.

கதலிநாச்சிகூட அவளது பெரியன்னையின் முகூர்த்தப் பட்டுப்புடவையை குடும்பத்தோடு கூடி வழிபட்டவள் தான்.

அதையும், வியாபாரி ஹிதாயத் கூறியதையும் நினைத்தபோது அவளுக்குள் பழைய நினைவுகள் அலைபுரண்டன.

"ராணியார் யோசிப்பதைப் பார்த்தால்..."

"ஒன்றுமில்லை. இந்த தங்கப்புடவை எனக்குள் சில நினைவுகளை உருவாக்கிவிட்டது. இங்கேயும் ராஜபுத்திரர் களைப் போல சதிமாதாக்களை வழிபடும் சீரிய பழக்கம் உண்டு வியாபாரி..."

"அப்படியா!"

"ஆமாம்... உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் இதை நானே எடுத்துக்கொள்கிறேன்."

"ராணி..."

"உண்மையாகத்தான். மூன்று லட்சம் பொன்னையும் தருவேனா மாட்டேனோ என்று தயக்கமா?"

"அப்படி இல்லை ராணி. பதிலுக்கு நீங்கள் இந்தப் புடவையின் நிறையளவுக்கு தங்கத்தை தந்து வைரத்துக்கு மட்டும் பொன்னை வழங்கினால் போதும்."

"அப்படியே செய்கிறேன். அண்ணா உங்களுக்கு இதில் ஏதும் ஆட்சேபம் உண்டா?"

–கதலி வள்ளல் சீதக்காதியைப் பார்த்து கேட்டாள் வள்ளல் சீதக்காதி சிரித்தார்.

"இப்படி சிரித்தால் என்ன அர்த்தம் அண்ணா...?"

"சிரிக்காமல் என்ன செய்வது சகோதரி. பொன்னாசை என்றும் ஆபத்தானது. அதிலும் இந்த புடவை பொன்னாசை பேராசையாகவே எனக்குப்படுகிறது."

"அப்படியானால் ராஜபுத்திர வம்சத்தவர்கள்தான் இதை அணியவேண்டும். மறவர்குலப் பெண்கள் மலிவானவர்களா?"

"தவறு... தவறு... நீ தவறாக சிந்திக்கிறாய் . எந்தப் பெண்ணாக இருந்தாலும் சரி. தங்கத்தால் தேகம் மூட நினைப்பது என் வரையில் பேராசையே."

"இருந்துவிட்டுப் போகட்டும். இந்த சேதுநாட்டு ராணிக்கு அதற்கு தகுதியிருப்பதாகக் கருதுகிறேன். இல்லையென்கிறீர்களா?"

'மன்னிக்கவேண்டும் சகோதரி. உன் தகுதியை நிர்ணயம் செய்பவன் நானல்ல. நீ வாங்குவது என்று முடிவு செய்துவிட்டாய்... அதை நான் தடுத்தால் உனக்கும்சரி... இந்த வியாபாரியான எனது நண்பருக்கும் சரி நான் பாவியாகி விடுவேன். ஆகவே நான் அந்தத் தவறை செய்ய விரும்பவில்லை."

"நல்லது... முதலில் நீங்களே என்னை ஆசீர்வதியுங்கள்."



–கதலி புடவையுடன் வள்ளலின் முன்னால் தலை குனிந்தாள். வள்ளலும் இருகரங்களை உயர்த்தி ஆசிர்வதித் தார். கதலியின் முகம் மகிழ்சியில் மலர்ந்த தாமரை போல ஆனது. அப்பொழுது ஹிதாயத் முகத்திலும் சொல்ல முடியாத அளவு ஆச்சரியம். அது வார்த்தையானது.

"மதமாச்சரியங்கள் இல்லாத உங்கள் அன்பையும், பாசத்தையும் பார்க்கையில் எனக்கு பொறாமையாக இருக்கிறது." –என்றார்.

"அதுதான் இந்த சேதுமண்ணின் சிறப்பு. இங்கே புலியும் மானும்கூட ஒற்றுமையுடன் வாழ முயற்சி செய்யும். ஏன் என்றால் எங்கள் அரசர் அப்படிப்பட்டவர். ஒரு நாட்டின் தலைமையை வைத்துத்தானே எல்லாமே தீர்மானமாகிறது?"

"ஆமாம்... ஆமாம்..."

– ஹிதாயத் மகிழ்வுடன் கூற, கதலி அந்த தங்கப் புடவையுடன் சேடியப் பெண்களோடு புறப்படக் காலெடுத்தாள். அப்பொழுது எதிரில் ஒரு சேவகன் ஓடிவந்து மூச்சிளைபட வந்து நின்றான்.

"என்ன சேதி?" –கேட்டாள் கதலி.

"சரவணம்பட்டி விஜய வல்லப சேதுபதி அவர்கள் வீர ஸ்வர்க்கம் அடைந்து விட்டாராம் ராணி. இப்பொழுதுதான் புறாக்காலில் சேதி வந்தடைந்தது."

– அடுத்த நொடி கதலி கலங்கிப்போனாள். மங்கலமான தங்கப்புடவையை தனக்கென்று வாங்கிக்கொண்டு திரும்பிய அடுத்த நொடியே தனது தூரத்து உறவினர் ஒருவரின் மரணச் செய்திதான் முதல் செய்தியாக காதை மோதியுள்ளது.

அப்படியானால் இந்தப்புடவை வியாபாரி ஹிதாயத் கூறியதுபோல பின்னப் புடவைதானா?

கதலிக்குள் துக்கத்துக்கு நடுவிலும் புடவை தொடர்பாய் கலக்கமும் பரவத் தொடங்கியது.

## 5

அந்த மெக்கானிக் காருக்குள் கொக்கு போலத் தலையை நுழைத்துப் பார்த்துவிட்டு பின் நிமிர்ந்தான். அருகில் டென்ஷனோடு பாண்டியன்.

"சார்... எப்படி சார் இந்த காரை ஓட்டிகிட்டு வந்தீங்க?"

"ஏம்ப்பா இப்படி கேக்கறே?"

"உள்ற ஏகப்பட்ட பிராப்ளம். ஏழெட்டு கனெக்ஷன் கட் ஆகியிருக்கு. யாரோ உள்ற பேட்ரியைத் திருட முயற்சி பண்ணியிருக்காங்க..."

- அவன் அதிர்ச்சியளித்தான்.

"ஆச்சரியமாயிருக்குதே... நான் எப்பவும் எங்க ஆபீஸ் கார் பார்க்கிங்குலதான் நிறுத்துவேன். அங்க வாட்ச்மேன் காவலுக்கு இருக்கான். நோ சான்ஸ்..."

"அட போங்க சார்... ஏர்போர்ட்ல மந்திரி ஒருத்தர் சூட்கேஸ் திருடு போவுது. இது என்ன சார்?"

"சரி இப்ப என்ன பண்ணலாங்கறே?"

"ஷெட்டுக்கு தள்ளிக்கிட்டு போய் கம்ப்ளீட்டா கழட்டிதான் வேலை செய்யணும். நாலஞ்சு அவர் ஆகும்."

"மைகாட்... நான் இப்ப அவசரமா ஊருக்கு போய்கிட்டிருக்கேன். கொஞ்சம் சீக்கிரமா பாத்து பண்ண முடியாதா?"



"அவசரப்பட்டா எப்படி சார்? இங்க இருந்து ஹுக் பண்ணி இழுத்துகிட்டு போகவே இரண்டு மணிநேரம் ஆயிடும். ஒண்ணு பண்ணுங்க. நீங்க வண்டிய விட்டுட்டு எதானா பஸ், கார்ல உங்க ஊருக்கு போக முடியுமா பாருங்க. ஆமா உங்க ஊர் எது?"

"சிவகங்கை பக்கமா சரவணம்பட்டி."

"ஓ... மதுரை போய் போகணுமோ?"

"இல்ல. நான் தஞ்சாவூர் போய் புதுக்கோட்டைபோய் வேற, ரூட்ல போய்டுவேன். அதோட என் ஊர் ஒரு கிராமம். ராத்திரியில் அங்க போக பஸ் வசதி எல்லாம் கிடையாது."

"அப்ப ஒரு வாடகை கார்தான் சார் பெஸ்ட்."

-பாண்டியன் யோசிக்க ஆரம்பித்தான்.

"என்ன சார் யோசிக்கிறீங்க... நமக்கு தெரிஞ்ச ஒரு ட்ராவல்ஸ் ஏஜென்ட் இருக்காரு. அவர் கார்ல நீங்க ஊருக்கு போயிடுங்க. நான் ரிப்பேர் பாத்துட்டு இந்த காரோட உங்க ஊருக்கே வந்து காரை விட்டுட்றேன் என்ன சொல்றீங்க?"

- அவன் கேட்க, பாண்டியன் யோசனையைத் தொடரும்போது "ஹாலோ மிஸ்டர் பாண்டியன்...!" என்று ஒரு குரல்!

திரும்பினான்.

அருகில் உரசிக்கொண்டு நின்ற காரில் ஒரு வண்ண மயில்.

"ஹாய் விசித்திரா...!"

"என்ன பாண்டியன்... கார் மக்கர் பண்ணிடிச்சா? பானட் திறந்திருக்கு. சார் யார்...மெக்கானிக்கா?"

"ஆமாம்... கரெக்டா கண்டு பிடிச்சட்டீங்களே."

"இதுக்கெல்லாமா ஐ.க்யூ வேணும். ஆமா எங்க போறீங்க?"

"என் சொந்த ஊருக்கு... வழியில இப்படி ஆயிடிச்சு"

"ஆமா... எது உங்க சொந்த ஊர்?"

"சிவகங்கை பக்கத்துல இருக்கு. சரவணம்பட்டி. ஆமா நீங்க எங்க?"

"வாட் எ சர்ப்ரைஸ். நான்கூட உங்க ஊருக்குநான் போறேன்." - அவள் இன்ப அதிர்ச்சியளித்தாள்.

"எங்க ஊருக்கா...? சரவணம் பட்டிக்கா?"

"யெஸ் மேன். நம்ப முடியலையா?"

"ஆமாம்... அது சரி அங்க என்ன வேலை உங்களுக்கு?"

"சொல்றேன். சரி இப்ப என்ன பணணப் போறீங்க?"

"நீங்க 'யெஸ்'சுன்னா உங்க கூடவே நானும் வட்துட்றேன். கார் ரெடியாக டைமாகுமாம்."

"இதென்ன கேள்வி பாண்டியன். தனியா அவ்வளவு தூரம் போறோமேன்னு நினைச்சேன். நல்லவேளை உங்களை பாக்க முடிஞ்சது. கமான்! கெட் இன்!"

-பாண்டியனுக்கு அப்பாடா என்றிருந்தது.

மனதில் மையம் கொள்ளப் பார்த்த கலவரப் புயல் தென்றலாய் மாறியது போல தோன்றியது.

"மெக்கானிக் சார்... அப்ப நீங்க ரிப்பேர் பண்ணி காரை என் வில்லேஜுக்கு எடுத்துகிட்டு வந்துடுங்க.. அட்ரஸ் சொல்றேன்... நோட் பண்ணிக்குங்க."



-மளமளவென்று அட்ரஸை மெக்கானிக்கிடம் சொல்லத் தொடங்கினான்.

"மிஸ்டர் காசி லிங்க சேதுபதி, ஜமீன் மாளிகை, சரவணம்பட்டி-ஊர்ல வந்து யாரைக் கேட்டாலும் எங்க வீட்டுக்கு வழியைக் காட்டிடுவாங்க. அந்த ஊர்லையே ஒரே பங்களா எங்களதுதான். ஓ.கே...?"

"ஓ.கே. சார்..."

அடுத்த நொடி விசித்ரா என்னும் அந்த இளம் பெண்ணின் காரில் அவன் அடங்க அது ராமபாணமாட்டம் பாய ஆரம்பித்தது.

உள்ளே...

"உங்களுக்கு இன்னொரு சர்ப்ரைஸ் பாண்டியன்!"

"சொல்லுங்க..."

"நான் உங்க ஊருக்கு எதுக்கு வரேன்னு கேட்டீங்கல்ல?"

"ஆமாம்... எதுக்கு வர்றீங்க?"

"உங்க வீட்டுக்குத்தான் வந்துகிட்டிருக்கேன்..."

"என் வீட்டுக்கா.. ரியலி?" -அவனிடம் ஆச்சரியம் கொப்பளித்தது.

"ஆமாம்... திடீர்னு எடிட்டர் கூப்பிட்டு 'சரவணம்பட்டி வரை போய்ட்டு' வான்னார். "என்னசார் விஷயம்?'னு கேட்டேன். 'சரவணம்பட்டி ஜமீன்ல ஒரு விசேஷ பூஜை நடக்கப் போகுது. அந்த பூஜையின் போது ரொம்ப பெக்கூலியரா பலவிஷயங்கள் நடக்க இருக்குது. அவ்வளவும் ட்ரெடிஷனலான கிராம தேவதைகள் சம்மந்தப்பட்ட விஷயங்கள். போய் கவர் பண்ணிட்டு வா'ன்னு சொன்னார். அதுதான் வரப்போற இஷ்யூ வோட கவர்ஸ்டோரி!"

-அந்தப் பெண் நளினமாக உதட்டைச் சுழித்து பேசியபடியே சிரித்தாள்.

"வாட் எ சர்ப்ரைஸ்... எங்க வீட்டு விசேஷம் உங்க பத்திரிகைக்குகூட தெரிஞ்சிருக்கே?"

"அப்படின்னான பாத்துக்குங்க. நாங்க எவ்வளவுதூரம் எங்க நெட் ஒர்க்கை டெவலப் பண்ணியிருக்கோம்னு..."

"உண்மைதான். இப்பல்லாம் ஒவ்வொரு பத்திரிகையும் வித்தியாசமான செய்திக்கு ரொம்பதான் பறக்கறாங்க..."

"இல்லேன்னா சன் டீ.வியும், விஜய் டீவியுமுல்ல எங்கள சாப்ட்டுடும்... விஷுவல் நெட் ஒர்க் இந்த உலகத்தையே சுருக்கிடுச்சே?" அவள் கலகலப்பாக பேசிக்கொண்டே வந்தாள். இப்போதெல்லாம் எந்த யுவதிப் பெண்ணும் தலையை வாரிக் கட்டுவதே கிடையாது. அது மெல்லிழையூாய், சுதந்திரமாய் வழிந்து வழிந்து முகத்தின்மேல் விழ, அதை ஒதுக்கிவிட்டுக் கொண்டே பேசுவதுதான் இப்போதை ஃபேஷன்.

அப்புறம் பாவாடை, தாவணி, புடவை இவை எல்லாம்கூட அவுட் ஆஃப் பேஷன்!

மிடி-சுடிதார்-ஜீன்ஸ் பேண்ட் தான்.

இவள் ஜீன்ஸும், டி-ஷர்ட்டுமாய் ஹைடெக் யுகத்துக்கேற்ற தேவதையாகத்தான் தெரிந்தாள். வயது இருந்தால் இருபத்தி இரண்டு இருக்கலாம்.

நிச்சயம் சினிமா வாய்ப்பாவது, டீ.வி. வாய்ப்பாவது இவளுக்கு வந்திருக்க வேண்டும். அதை இவளும் மறுத்திருக்க வேண்டும் என்றுதான் பாண்டியனும் நினைத்தான்.

ஒருமுறை ஒரு தொழிற்சாலை சம்பந்தமான கவர் ஸ்டோரிக்காக சதர்ன் இண்டஸ்ட்ரீசுக்குள் நுழைந்தபோது



தான் பாண்டியனுக்கு அறிமுகமானாள். அது இப்போது காருக்குள் நட்புகொண்டு அமர்ந்து பயணம் செய்வது வரை தொடர்ந்தபடி இருக்கிறது.

"ஆமா... தனியாவா சரவணம்பட்டிக்கு வர்றீங்க?"

"ஏன் வரக்கூடாதா...? நான் நூறுபேருக்கு சமம்னு எங்க எடிட்டர் சொல்வார்"

"இருக்கலாம். இருந்தாலும் ஒரு வயசுப்பொண்ணு தனியா அவ்வளவு தூரம்...?" -பாண்டியன் மென்று விழுங்கினான். அவள் சிரித்தாள். சிரிப்பா அது? முத்து, சோழியை எல்லாம் உதாரணம் சொன்னால் அது இந்த யுகத்துக்கு பொருந்தாது. டிஜிட்டலைஸ் செய்யப்பட்ட ஒரு எதிரொலி சப்தம் போலத்தான் அது இருந்தது.

"எதுக்கு இப்படி ஒரு சிரிப்பு?"

"இல்ல... ஒரு மாடர்ன் இண்டஸ்ட்ரியோட ஒரு எக்ஸிக்யூடிவ் பேசற பேச்சா இதுன்னு நினைச்சேன், ஆமா உங்க பிராட் அப் எல்லாம் சரவணம்பட்டியா?"

"ஆமாம்... ஏன் கேக்கறீங்க?"

"அதான் சென்னை பொம்பளைங்களப் பத்தி உங்களுக்கு சரியா தெரியல."

சொல்லிக் கொண்டே மார்புச் சரிவுக்கு மேல் மூடிக்கிடந்த டீ-ஷர்ட்டின் ஜிப்பை சர்ரென்று கீழ் இறக்கினாள்.

பாண்டியனுக்கு பகீர் என்றது.

அவள் கை சட்டென்று அதற்குள் நுழைந்து ஒரு சிகரெட் பாக்கெட்டை வெளியே எடுத்தது. அப்போது வளமையான அவளது மார்பகங்களின் மேல் வளைவுப் பகுதி இரண்டும்

இரண்டு பலூன்கள் மோதிக் கொள்வது போல மோதிக் கொண்டு பின் காற்று போனது போல அடங்கிப் போயின.

அவனுக்கு வியர்த்துவிட்டது.

அவள் ஒரு சிகரெட்டை உருவி வாயில் செருகிக் கொண்டே டேஷ் போர்டில் கிடந்த லைட்டரை எடுத்து நெருப்பு மூட்டினாள்.

அப்புறம் வளையம் வளையமாக புகை.

அப்படியே அவன் பக்கம் சிகரெட்டை நீட்டினாள்.

"நோ தேங்க்ஸ். பழக்கமில்லை!"

"ரொம்ப தப்பு. மனுஷன்னா ஏதாவது ஒரு கெட்ட பழக்கமாவது இருக்கணும். சும்மா பிடியுங்க."

"என்கிட்ட வேறமாதிரி கெட்ட பழக்கம் ஒண்ணு இருக்கு. அதுவே போதும்."

"அது என்னன்னு நான் தெரிஞ்சிக்கலாமா?"

"அழகான பெண்கள்னா சைட் அடிப்பேன்..."

–அடுத்த நொடி 'அஹ்ஹஹ்ஹா' என்று பெரிதாய் ஒரு சிரிப்பு சிரித்தாள்.

"நீங்க ரொம்ப வித்தியாசமான பொண்ணுதான் விசித்ரா."

–அவன் கமென்ட்டையும் ரசித்தாள்.

"இல்லேன்னா இன்னிக்கு இருக்கற சொஸைட்டி எங்களை அடுப்படியிலையே போட்டு புதைச்சிடும்" – என்று கண்களையும் சிமிட்டினாள். அதே சமயம் நின்று கொண்டிருக்கும் காரில் இருந்த ஒருவன் விசித்திராவை போகிற போக்கில் ஒரு பார்வை பார்த்தான். அவளும் அவனுக்கொரு 'ஹாய்' சொன்னாள்.



"அவரைத் தெரியுமா உங்களுக்கு?"

"தெரியும். உங்கள மாதிரிதான் அவரும் பழக்கம்." என்றாள்.

ஆனால் அது பொய். அவன் செல்போனை கையில் எடுத்திருந்தான்.

யாருக்கோ தகவல் சொல்ல ஆரம்பித்தான்.

"பாஸ்! நம்ம ராட்சஸி அந்த பாண்டியனை கவுத்துட்டான்னு நினைக்கறேன். போட்ட பிளான் பக்காவா ஓர்க் அவுட் ஆகிகிட்டிருக்கு!'*

## 6

கதலி நாகசியின் முகத்தில் ஏகத்துக்கும் சோக ரேகைகள். சேடிப்பெண் ஒருத்தி கேட்டாள்.

"அந்த சேலை வாங்குன நேரமே சரியில்லைன்னு நினைக்கிறேன். சரிதானே ராணி...?"

"ஆமாண்டி. நான் பாட்டும் ஆசையினால வாங்கிட்டேன். மங்கலச் சேலைன்னு நினைச்சேன். ஆனா காதுல விழுந்த முதல் சேதியே என் உறவுக்கார பெண்ணோட தாலிக்கான பறிப்பா போச்சு."

"அப்ப ஒண்ணு பண்ணுங்க ராணி..."

"என்னடி...?"

"இதை திருப்பிக் கொடுத்துடுங்க. ராஜபுத்திரப் பெண்கள் காரணமில்லாம இதை வேண்டாம்னு சொல்லலை."

"ஆமாம். அதுதான் சரி! அந்த வியாபாரி கிளம்பி விட்டாரா என்று பார்."

"இல்லைன்னுதான் நினைக்கறேன். விருந்து சாப்பிடாம அவர் போகமாட்டார். கணக்காயரும் அனுப்பமாட்டார். ஆகையால் அதை என் கைல கொடுங்க. நான் போய் கொடுத்துட்றேன்."

"வேண்டாம்.. அவரை நீ இங்கு என் அறைக்கு அழைத்து வா. நானே என் மனக் கசங்களைச் சொல்லி தந்துவிடுகிறேன். பதிலுக்கு அவர் கொண்டு வந்த அவ்வளவு பட்டுக்களையும் வாங்கிக் கொள்ளலாம். என்ன?"

"சரிங்க ராணி." - அந்த சேடிப்பெண் அங்கிருந்து விலகினாள்.

சற்று நேரத்திலேயே ஹிதாயத் அங்கு வந்துவிட்டார். "மன்னிக்க வேண்டும் வியாபாரி. நான் இதை வாங்கின நேரமே சரியில்லை என்று நினைக்கிறேன். நீங்கள் சொன்னது போல இது பின்னப்புடவைதான். அதனால்தான் அமங்கலச் செய்தியாக காதில் விழுகிறது. ஆகவே..."

-ஹிதாயத் மறுபேச்சே பேசவில்லை. இரண்டு கைகளையும் அதை பெற்றுக்கொள்வதற்காக நீட்டினார். வருத்தத்துடன் கதலி நாச்சியும் அதை அவரிடம் திரும்ப வழங்கினாள்.

"என்னை தவறாக நினைத்து விடாதீர்கள்!"

"நிச்சயமாக இல்லை. சில வைரங்கள் சிலருக்குத்தான் பொருந்தும். இது உங்களுக்கு பொருந்தவில்லை என்பதை அந்தச் சேதியைக் கேட்ட நான்கூட உணர்ந்தேன். இதை நீங்கள் திருப்பி தந்துவிடுவதுதான் நல்லது."

-என்று ஹிதாயத்தும் பெருந்தன்மையோடு பேசியது கதலி நாச்சியின் நெஞ்சில் பாலை வார்த்தது!



சரவணம்பட்டியே சோகத்தில் இருந்தது.

விஜயவல்லபசேதுபதி ஊரின் பெரிய தனவந்தர்களில் ஒருவர். பர்மா, பினாங்கு, இலங்கை என்று திரைகடலோடி வர்த்தகம் புரிபவர். சிறு வயதுதான். இன்னும் நாற்பதைக்கூட தாண்டவில்லை. ஆனால் இந்த உலக வாழ்வைத் தாண்டிவிட்டார். காமாலையை காரணம் சொன்னார்கள். அவரது அருமைப் பத்தினி மல்லீஸ்வரி சோகக்கடலில் விழுந்திருந்தாள். இன்னமும் இளமை அவளைவிட்டு விலகியிருக்கவில்லை. மேனியில் ராஜ செழுமை. மகாலட்சுமியே மனிதப் பிறப்பெடுத்து வந்துவிட்டாள் என்றுதான் ஊரே சொன்னது. ஆனால் அவள் இனி லட்சுமி இல்லை; முண்டகத்தி!

அதை நினைத்துத்தான் ஊரே பொறுமியது.

ஊரில் வீரக்கிழவிகள் பலருண்டு. அவ்வளவு பேருமே சுமங்கலிகள். சேதியறிந்து வீட்டைவிட்டே அவர்கள் வெளியில் வரவில்லை.

சொல்லப்போனால் அந்த ஊரில் அமங்கலியாய் ஒரு பெண்ணும் இருக்க வாய்ப்பே இல்லை. அந்தக் கோலம் மீது அவர்களுக்கு அப்படி ஒரு எதிர்ப்புணர்வு.

எப்பொழுது கணவன் மடிந்தாலும் அவனோடு வீரசொர்க்கம் போய்விடுவதுதான் மறச்சிகளுக்கு பிடித்த செயல். மல்லீஸ்வரியிடமும் அந்த வீரசொர்க்கம் பற்றி பேசப்பட்டது.

அழுது கொண்டிருந்த அவளிடம் நான்கு ஊர்ப்பெரியவர்கள் வந்து பேசத் தொடங்கினர்.

"தாயி.. நடக்கக்கூடாதது நடந்து போச்சு. விஜய வல்லபனுக்கு கொடுத்து வைக்கல. உன்ன முண்டகத்தி ஆக்கிட்டு போய்ட்டான். நம்ம வழக்கப்படி நீ அவன்

சிதைல இறங்கணும். அதுதான் ஊர் உலகத்துக்கும் உன் சந்ததிக்கும் நல்லது. உனக்கு சம்மதம்தானே?"

"என்ன கேள்விங்க இது...? மல்லீஸ்வரி புருஷன்மேல உசுரையே வெச்சிருந்தவ. நாம இருன்னு சொன்னாலும் இருப்பாளா...! எப்ப கட்டைல வைப்போம்னுதானே காத்துகிட்டிருப்பா..?"

– அவர்கள் பேச்சுக்கு மல்லீஸ்வரியும் மறுபேச்சு பேசாமல் தலையை அசைத்தாள்.

"முதல்ல காரியத்துக்கு ஏற்பாடு செய்யுங்க... என் ராசாவுக்கு என்ன செய்யணுமோ அதை செய்துட்டு நான் அவர் கூட போறேன். அவர் ஆத்மா நான் இல்லாம தனிமைல துடிச்சிட்டிருக்கும்." –என்ற விம்மி அழுதாள்.

"நல்லது தாயி... பொட்டல்ல அதுக்கான ஏற்பாடுங்க நடந்து கிட்டிருக்கு. நாங்களும் மத்த ஏற்பாடுகளை செய்யறோம். உன்னை ராணி மாதிரி அலங்கரிக்க பார்த்தி பனூர்ல இருந்து பூக்கார பெண்டுக வருவாங்க. நீயும் தயாராயிரு தாயி..."

–என்றபடி அவர்கள் விலகிப் போயினர்.

அவர்கள் விலகவும் மல்லீஸ்வரியின் அப்பனும் ஆயியும், மாமனும், மாமியும் மற்றுமுள்ள உறவுகளும் மார்பில் அறைந்து கொண்டு அவளை வந்த சேர்ந்தனர்.

சிலர் கட்டிக்கொண்டு கண்ணிர்விட்டனர்.

சிலர் துக்கம் தாளாமல் இறுக்கமாக இருந்தனர்.

"ஐயோ... என் ஆசை மகளே! உனக்கு இப்படி ஒரு முடிவா?" –என்று மல்லீஸ்வரியின் தாய் அடிக்கடி மூர்ச்சையாகி விழுந்தாள்.



அந்தக் கூட்டத்தில் மல்லீஸ்வரியின் மகன் மருதப்ப சேதுபதியும், மகள் மாவிளங்கண்ணியும் இருந்தார்கள்.

இருவருக்குமே வாலிப வயது. அதிலும் மருதப்ப சேதுபதிக்கு துள்ளும் இளமை. அரும்பு மீசையும் அகண்ட மார்புமாய் வீர இலக்கணம் சொல்லும் ஆகிருதியான உடம்பு.

தாயை கண்ணீரோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் உடன்கட்டை ஏறுவதில் விருப்பம் இல்லாதவனாய் மனம் குமுறலில் இருந்தது.

அருகில் இருந்த மாமா வீரகேசவ சேதுபதியிடம் கேட்டான்.

"மாமா... அம்மா சாவத்தான் வேணுமா?"

"இப்படிக் கேட்டா எப்படி மருமகனே. அதாம்பா நம்ம சாங்கியம்."

"என்ன மாமா இது சாங்கியம். புருஷன் செத்தா பொண்டாட்டியும் செத்தே தீரணுமா?"

"இப்ப நீ இப்படித்தான் பேசுவே. ஆனா செத்துப்போன உன் அப்பாவோட ஆத்மாவை நினைச்சுப்பாரு. அது உன் அம்மாவுக்காக துடிச்சிட்டிருக்கும்ல?"

"இங்க நாங்க துடிக்கிறோமே அது பெரிசில்லியா?"

"அதுவும் தான் பெரிசு. ஆனா உங்களப் பாக்க நாங்க எல்லாம் இருக்கோம்ல?"

"நீங்க என் அம்மா வாயிடுவீங்களா?"

–அந்தக் கேள்வி வீரகேசவ சேதுபதியை சற்று திணறச் செய்தது.

"நீ என்ன சொல்றே?"

"இந்த சாங்கியம் வேண்டாம் மாமா. எனக்கு என் அம்மா வேணும்."

"இதுக்கு உன் அம்மாதான்பா பதில் சொல்லமுடியும். நம்ம சேதுபதி ஆட்சியில் ஒரு பெண் விரும்பினாதான் உடன்கட்டை. ஆகையால் உன் அம்மா முண்டகத்தியா இருக்க விரும்பினா யாரும் அதுக்கு தடை சொல்ல முடியாது."

அடுத்த நொடி அவன் நேராக அம்மா மல்லீஸ்வரியை சமீபித்தான்.

"ஆத்தா... நீ சாவக்கூடாது," என்றான். அவள் கண்ணீரோடு நிமிர்ந்தாள்.

"ஆமாம் ஆத்தா. நீ சாவக்கூடாது. நீ எங்களுக்கு வேணும். அப்பாதான் எங்களை உட்டுட்டு போயிட்டார். நீங்களும் இல்லேன்னா நாங்க என்ன ஆத்தா பண்ணுவோம்?"

-அவன் தங்கை மாவிளங்கண்ணியும் அழுதாள். மல்லீஸ்வரி பதில் சொல்லாமல் அவர்களைக் கட்டிக் கொண்டாள்

அதே சமயம் வாசல்புறம் கொம்பு ஊதப்படும் சப்தமும், நாகரா முழங்கும் சப்தமும் எல்லோர் காதையும் அடைத்தது. எட்டிப்பார்த்தார்கள்.

கோச்சு வண்டி ஒன்று வந்திருந்தது. சில அரண்மனை வீரர்கள் தெரிந்தார்கள்.

வீரகேசவர் உடனேயே உணர்ச்சி வசப்பட்டார்.

"அரண்மனைச் சீர் வந்துருக்கு. நாச்சியாரம்மாவும் வந்துருக்காங்க...." -என்று குரல் கொடுத்தார். அதைத் தொடர்ந்து கதலி நாச்சி கோச்சில் இருந்து இறங்கி வந்தாள். அவளைத் தொடர்ந்து தட்டுத்தட்டாய் சீர் பொருட்கள்.



பெரியதாய் மாலை ஒன்று. அது செத்துக்கிடக்கும் விஜய வல்லப சேதுபதிக்கு அணிவிக்கப்பட்டது.

சேதுபதி சடலம் ஒரு சிம்மாசனம் போன்ற நாற்காலி யில் உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்தது. அரண்மனை மாலையோடு பார்க்கும்போது பேரரசன் ஒருவன், ராஜபரிபாலனம் பண்ணியபடி ஒரு அரண்மனையில் அமர்ந்திருக்கிற மாதிரி தோன்றியது.

கதலி நாச்சியும் அந்தக் கோலத்தைப் பார்த்து கண்ணீர் விட்டாள். எல்லோரும் அவளைக் கட்டிக்கொண்டார்கள். அப்பொழுது பார்த்து பார்த்திபனூர்ப் பூக்கார பெண் களும் மாட்டு வண்டி ஒன்றில் வந்து இறங்கினார்கள். அவர்களே சிறு கூடைகளில் செவ்வந்தி, மல்லிகை, தாழம்பூ என்று பூக்களைக் கொண்டு வந்திருந்தார்கள். அவற்றோடு அந்த மாளிகை வீட்டினுள் நுழைந்தார்கள்.

அவர்களைப் பார்க்கவும் கூட்டத்திடம் மேலும் துக்கம் பீறிட்டது. மாளிகை வாயிலில் காலில் சதங்கையுடன் ஆடும் வப்பாளத்தானும் அந்த சோகத்தை எதிரொலிக்கிறார்போல ஆடிப்பாடத் தொடங்கினான்.

*"வானம் பாக்கப்போன என் ராசா...*
*வந்தனம் வந்தனம் என் ராசா...*
*தேனா இனிச்சதய்யா உன் பேச்சு– இப்ப*
*வீணாப் போனதே உன் மூச்சு...!"*

-அவன் பாட்டில் ஒரு விதமான சந்தம்... காலிலும் ஒருவிதமான ஆட்டம்... கூட்டம் வட்டம் கட்டி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

உள்ளே மல்லீஸ்வரி மக்களை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"மக்கா... நம்ம பரம்பரைக்குன்னு ஒரு பெருமை இருக்கு. பண்பாடு இருக்குது. நான் முண்டகத்தியா இருந்து அதை

பாழ்ப்பண்ணக் கூடாதுய்யா. உங்களை உட்டுட்டு சாவ இந்த தாயிக்கு இதயம் கல்லாலயா ஆகியிருக்குது...? இருந்தும் நான் சிதை புகப்போறேன்னா அதுக்கு அர்த்தம் வேற!

நம்ம பொண்டுக ரத்தம் பத்தினி ரத்தம். அது எப்பவும் புருஷனுக்கு காவல் நிக்கும். குடியையும் காத்துகிட்டிருக் கும்.

நல்லா கேட்டுக்குங்க. அழியப்போறது என் தேகம்தான். நான் இல்ல! நான் இந்த கட்டுன புடவையிலையும், அவர் கட்டுன இந்த கருகுமணியிலையும் எப்பவும் இருப்பேன். பத்தினித் தெய்வமா நான் உங்களையும், நம்ம குடும்பத்தையும் எப்பவும் காத்து நிப்பேன். அப்படி ஒரு காவல் நம்ம குடும்பத்துக்கு இல்லாம போனதாலதான் இப்ப எனக்கு இப்படி ஒரு நிலை... இனி நான் இருந்து நம்ம தலைமுறைலையே யாருக்கும் முண்டகத்தன்மை இல்லாம பாத்துக்குவேன். அதேபோல அவுக அவுக சௌகர்யத்துக்கும் நான் காரணமா இருப்பேன்.

உங்க ஆத்தா சாமியாகப் போறா! உங்க அப்பு இந்த சாமிக்கே சாமியாகி இரண்டு பேரும் இந்த சரவணம் பட்டியையே காவல் காப்போம். ஆகையால் பாசத்தைக் காட்டி ஆத்தாளைக் கட்டிப்போட்றாதீங்க என் ஆசை மக்கா..." -என்று ஒரு நீண்ட பேச்சு பேசிவிட்டு கண்ணீரை யும் பெரிதாய்ச் சிந்தினாள். அவள் பேசி முடிக்கவும், மருதப்ப சேதுபதியையும், மாவிளங்கண்ணியையும் சிலர் வந்து தரதரவென்று இழுத்துச் செல்லத் தொடங்கினார்.

"ஆத்தா... ஆத்தா..." என்று அவர்களது கதறல் நெடுந்தூரம் வரை கேட்டபடி இருந்தது.

**ச**ரவணம்பட்டி வடக்குப் பொட்டல்!



அங்கங்கே இதற்குமுன் உடன்கட்டை ஏறிய பெண் களின் நினைவாகவும், வீரபுருஷர்களின் நினைவாகவும் சிறிது சிறிதான சதிமாதாக் கோவில்கள் நான்கு கால் தூண்களோடும் ஒரு கல் மண்டபத்தோடும் கீழே எளிய ஒரு நடுகல்! அதை மூடியபடி சுவர் எழுப்பிய சிறிய கோவில் ஒன்று. இதுதான் சதிமாதாக் கோவில்.

அந்த நடுகற்களில் இறந்தவர்களின் பெயரும், நாளும் உடன்கட்டை ஏறிய பத்தினியின் பெயரும் பொறிக்கப் பட்டிருக்கும். அதன் முன்னால் அவர்கள் குடும்பத்தவர் ஏற்றி வைத்திருக்கும் அகல்தீபம் எரிந்தபடி இருந்தது.

பொட்டல் ஏகத்துக்கும் பெரிதாக விரிந்து கிடந்தது. அதைத் தாண்டி ஊர்ச்சுடுகாடு. சுடுகாட்டை மரக்கூட்டம் மறைத்துக் கொண்டிருக்க வெள்ளாவிப் புகைபோல மரக்கூட்டத்திடையே வெந்து கொண்டிருக்கும் சடலப்புகை சுற்றி வந்து கொண்டிருந்தது.

பொட்டலில் சிதை குழி வெட்டியபடி இருந்தனர் சில பள்ள மக்கள். குழியை சுற்றி மூங்கில் நட்டு வடம் போக்கி கயிறு கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு இடத்தில் குழியை ஒட்டி பெரிய மேடை ஒன்று பலகைகளாலும், மூங்கிலாலும் உருவாகிக் கொண்டிருக்க, அந்த மேடையை நோக்கி சரிவாக மூங்கில்கள் கட்டப்பட்டு படுத்து வைக்கப்பட்ட ஒரு நடைச்சரிவாக அவை உருவாகிக் கொண்டிருந்தன.

**அ**ந்த மூங்கில் சரிவின் வழியாக நடந்து மேலேறிச் சென்றுதான் மேடையை அடையவேண்டும். மேடையின் மேல் கறுப்பு வஸ்த்ரம் ஒன்று கூரை போல் கட்டப் பட்டிருந்தது. இரண்டு மண்பானைகளும் கட்டப்பட்டு அதன் வாயை துணியால் மூடியிருந்தார்கள். அதில் ஒன்றில் பாலும், அடுத்ததில் வாய்க்கரிசியும் இருந்தது.

இன்னும் சற்று நேரத்தில் ஊரே வந்து குழியைச் சுற்றி கூடிவிடும். அதன்பின் மல்லீஸ்வரி அந்த மேடைமேல்வந்து அமருவாள். உடன் பூக்காரப் பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். உறவினர்களில் ஆண்மக்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அதன்பின் சிதைக்கு தீ மூட்டப்பட்டு அது கொழுந்து விட்டு எரியும்.

அருகே வப்பாளத்தான் இருந்து நாகராவை முழக்கிய படியே இருப்பான்.

'தொம்... தொம்... தொம்...' என்று சப்தம் கூட்டத்தையே கட்டிப் போட்டுவிடும். அது இடைவெளியில்லாமல் ஒலிக்கும் போது, தூரத்தில் எழவு கொட்டவந்த பெண்கள் கூட்டம் அதைக்கேட்டு குலவை போட்டு முடிப்பார்கள். பின் கைகளைக் கூப்பி வணங்கியபடி சதிமாதாவான பத்தினிப் பெண் எரியும் சிதையில் குதிப்பாள். இதுதான் வழக்கம்.

மறுநாள் வந்து சிதைச் சாம்பலைச் சேகரித்து அதை ஒரு கலயத்தில் போட்டு எடுத்துச் செல்வார்கள்.

அந்தச் சாம்பலோடு அவள் கடைசியாக உடுத்தியிருந்த புடவை, கருகுமணி மற்றும் நகைகள் ஒரு மரப்பெட்டியில் வைத்து மூடப்படும். அதன்பின் அந்தப் பெட்டி தான் அவர்கள் வணங்க வேண்டிய தெய்வம்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் அதைத் திறந்து பார்க்கவோ அதை வேறு விஷயங்களுக்குப் பயன்படுத் தவோ கூடாது. அப்படிச் செய்ய நேரிட்டால் இறந்த சதிமாதாவின் ஆவிக்கு சாந்தி ஏற்படாமல் போய் அது அலையத் தொடங்கிவிடும். அதன்பின் அந்தக் குடும்பமும் எந்த நிலையிலும் விளங்காது - என்பதெல்லாம் நம்பிக்கை.



எனவே அந்தப் பெட்டியை ஒரு தெய்வ விக்ரகமாகக் கருதி வழிபடுவதோடு அதற்கே ஒரு கோவிலும் கட்டி பூட்டிவிடுவார்கள்.

வருடத்தில் ஒருநாள்... சதிமாதா உடன்கட்டை ஏறின சமயத்தில் அந்த பெட்டிக்கு பூசை நடைபெறும். பின் திரும்பவும் பெட்டி சன்னதியில் உள்ளடங்கிவிடும். அதற் கான பெட்டியைக்கூட புதிதாக மரமறுத்து அதில்தான் செய்ய வேண்டும். நல்ல தேவதாரு மரத்தின் தண்டில் செய்வது தான் விசேஷமும்கூட...

அதற்காக ஒருவன் தேவதாரு மரத்தைத் தேடிக்கொண்டு சரவணம்பட்டியை ஒட்டியுள்ள கரட்டுக்காட்டுப் பக்கம் கிளம்பினான்.

ஜமீன் வீட்டிலும் சாங்கியங்கள் நடந்தபடி இருந்தன அடுத்து...

## 7

சரவணம் பட்டிக்குள் கார் நுழைந்தபோது அர்த்த ராத்திரியைக் கடந்துவிட்டது... இருந்தும் ஜமீன் வீட்டுத் தெருவில் பந்தலுக்கு தோரணம் கட்டும் வேலையும், வீதி முச்சூடும் கோலம் போடும் செயலும் நடந்து கொண்டிருந்தன.

கார் நுழையவும் எல்லோரும் நிமிர்ந்து பார்த்தார்கள். பங்களா வாசலில் பிரம்பு நாற்காலிகள் போடப்பட்டிருக்க அதில் ஒன்றில் பட்டுவேட்டியோடு திறந்த மார்பில் துண்டோடும் அமர்ந்தபடி வெற்றிலை போட்டுக் கொண் டிருந்தார் காசிலிங்க சேதுபதி!

ஹெட் லைட் வெளிச்சம் ஒரு பாவுத்தறிபோல் நீண்டு விழ, கார் நுழைவதைப் பார்த்து கண்களுக்கு கையையே

கூரையாகக் கொடுத்தார் காசிலிங்க சேதுபதி. பக்கத்தில் வாத்தியார் அருணாசலமும், ஊரின் பஞ்சாயத்து போர்டு தலைவர் வினாயகமும் அமர்ந்திருந்தனர்.

"நம்ம அய்யாவோட மகன் பாண்டி வந்துட்ட மாதிரி தெரியுது." -என்று கச்சிதமாய் அவர்கள் சொல்ல பாண்டியும் விசித்ராவோடு காரில் இருந்து இறங்கினான்.

காசிலிங்க சேதுபதிக்கு கொஞ்சம் நெஞ்சையடைத்தது. "ஆருவே அது குழாயும் சட்டையுமா கூட ஒரு குட்டி..." -என்று சற்று விக்கலோடு கேட்டார். பாண்டியன், இறங்கிய ஜோரில் அவர்களைப் பார்த்துவிட்டு நெருங்கிச் சென்று சேதுபதியின் காலில் முதலில் விழுந்தான். பணிவும் பண்பும் மாறவேயில்லை.

"எழுந்திருலே... எழுந்திருலே..." - சேதுபதி சொன்ன போதிலும், பார்வை விதித்ராமேல் இருந்தது. அவளோ கூந்தலை பத்து நொடிக்கு ஒரு முறை விலக்கி விலக்கிவிட்டபடி சூழலைப் பார்த்தாள்.

"அப்பா...! அவங்க பேர் விசித்ரா. ஒரு வாரப் பத்திரி கைல வேல பாக்கறாங்க. நாம சாமி கும்புடப் போறது பத்திரி தெரிஞ்சு அதுபத்தி எழுதறதுக்காக வந்துருக்காங்க." -அவன் சொன்ன பிறகுதான் எல்லோர் மார்புமே தழைந்தது.

"நல்லவேளை... பட்டணத்துக்கு சோலி பாக்க போன இடத்துல இந்தப் பொண்ணைக் கட்டிகிட்டு வந்து, அப்பா என் பொஞ்சாதின்னு சொல்லிடுவியோன்னு பயந்துட் டேன்."

-அவர் சற்று அவன் பொட்டிலடித்தார். அவனுக்கே என்னவோ போலாகிவிட்டது. அப்படியும் ஒரு நாள் நடக்கத்தானே போகிறது? எனவே சற்று வெளிறிப்போய் வெறித்தான். மனதில் அகல்யாவும் படமெடுத்தாள்.



"அட என்னங்க தலைவரே நீங்க... இப்படியா வந்ததும் வராததுமா பையனை மிரட்டுவீங்க. நம்ம பாண்டி அப்படி எல்லாம் செய்யுற புள்ளையா என்ன?" - என்று வாத்தியார் அருணாசலம் வக்காலத்து வாங்கினார். இதற்குள் செய்தி தெரிந்து வீட்டுக்குள் இருந்து பாண்டியன் அம்மா தெய்வநாயகி, அக்கா ராஜாத்தி, தங்கை மீனாட்சி, அத்தை ராஜாமணி என்று எல்லோருமே வெளியில்வந்து "பாண்டி... வந்துட்டியா ராசா..." -என்று அவன் கன்னம் வருடி திருஷ்டி கழிக்கத் தொடங்கி விட்டனர்.

விசித்ராவுக்கு எல்லாமே விசித்திரமாக இருந்தது. கூர்மையாக பார்த்தாள்.

"ஆமா... எங்க ஊட்டு விசேஷம் பத்தி உனக்கு எப்படி தெரியும் தாயி?" -சேதுபதிதான் கேட்டார்.

"உங்க ஊரைச் சேர்ந்த ஒருத்தர்தாங்க சொன்னார். ரொம்ப பெக்கூலியரா இருந்தது. அதான் அதைப்பத்தி கட்டுரை எழுதலாம்னு..."

"எந்த பத்திரிகைக்கு தாயி?"

"மல்லிகைங்கற பத்திரிகைங்க..."

"மல்லிகையா... அப்படி ஒண்ணு வருதா என்ன?"

"என்ன அப்படி கேட்டுட்டீங்க. நாலு லட்சம் சர்க்குலேஷன்."

"எங்களுக்கு தந்தி, மாலை முரசு விட்டா குமுதம், விகடன் தான் தெரியும்."

"ஏன் வாத்தியாதே... நம் ஊர் லைப்ரரிலதான் இப்ப எல்லா புத்தகமும் போட்றாங்களே. கல்கண்டு எத்தினி வருஷமா வருது. அப்புறம் தினமலரு, கல்கி, குங்குமம்..."

"சரி சரி... இப்ப அதுவாவிஷயம். வந்தவங்களுக்கு காபி, பலகாரம் கொடுத்து தங்க ஏற்பாடு செய்யுங்க. விடிஞ்சு எம்புட்டு வேலை கெடக்கு..."

"போ... தாயி... போ.. பாண்டி, ஆத்தாளை பார்த்து கூட்டிகிட்டு போ ராசா. நீயும் போய் கொஞ்சம் கட்டையை படுக்கைல போடு. பட்டணம் என்ன பக்கத்துலையா இருக்குது. எம்புட்டு தூரம். உடம்பு வலி சல்லிக்கட்டுல இறங்குனவன் கணக்கால்ல இருக்கும்."

- ரசனையோடு ஒருவர் வருத்தப்பட்டார். எல்லோரும் உள்ளடங்க காரிலிருந்து பெட்டிகளும் இறங்கின. குறிப்பாக ஒரு மேக்கப் பாக்ஸ் போன்ற ஹோல்டான் பாக்ஸ்... விசித்ரா தன் தோளில் ஏற்றிக் கொண்டாள். அதில் ஏதோ வெடிகுண்டே இருக்கிற மாதிரி இடுப்போடு கட்டி அணைத்தபடி நடந்தாள்.

அந்த நாளைய பங்களா!

கருங்கல்லில் அடித்தளம். முட்டையும் விளாம்பழமும் சுண்ணாம்பும் வெல்லமும் கடுக்காய் தண்ணீரும் சேர்ந்து பூசிய சுதை. ராட்சஸமாய் தூண்கள். அதில் வேலைப் பாடுகள்.

கடப்பைத் தரையில் பனிக்கட்டி கிடக்கிற மாதிரி ஒருவித சிலீர்.. கோலி புல்புகள். அதன் கொண்டைத் தலை மேல் தரக்கூம்புகள். அப்பட்டமாய் அந்த நாளைய வாசம் அங்குலத்துக்கு அங்குலம் அடித்தது. ஸ்விட்ச் போர்டி லிருந்து ரேடியோ பெட்டி வரை எல்லாவற்றிலும் பாகவதர் காலம் தெரிந்தது.

விசித்ரா பார்த்துக் கொண்டே நடந்தாள். ஹாலில் தேக்கு நாற்காலிகள். சத்தியமாய் எங்கு பார்க்க முடியாது. அதில் மெத்தைத் திண்டுகள். உட்கார்ந்தார்கள்.



"பாண்டி... சாப்பாடு ரெடி பண்ணட்டுமா?" -அவன் அம்மா கேட்டாள்.

"வேணாம்மா. வர்ற வழில சிவகங்கைல பசி எடுத்துச்சு. ஒரு ஹோட்டல்ல சாப்டோம். பால் மட்டும் கொடு." என்றவன் விசித்ராவைப் பார்த்தான். பின் அங்கு நின்று கொண்டிருந்த அவன் தங்கை மீனாட்சியைப் பார்த்து-

"மீனு... மேடத்தை உன் ரூமுக்கு கூட்டிக்கிட்டு போ. இன்னிக்கு ஒரு நாள் நீ அக்காகூட தங்கிக்க." என்றான். தலையை அசைத்தாள் அந்த பெண்குட்டி. பாவாடை தாவணியில் '16 வயதினிலே' ஸ்ரீதேவி மாதிரி இருந்தாள்.

"என்ன பாண்டியன்... இவங்களை எல்லாம் நீங்க அறிமுகமே படுத்தலையே...?" என்றாள் விசித்ரா. அடுத்து எல்லோரையும் அறிமுகப்படுத்தினான். பின் மீனாட்சி யோடு அவளை மாடியில் உள்ள அறைக்கு அனுப்பிவைத் தான். அவனுக்கும் அலுப்பாக இருந்தது. கொட்டாவி விட்டான். பால் கொண்டு வந்து தந்த ராசாத்தி அக்காவைப் பார்த்து வழிசலாக சிரித்தான்.

"ஆனாலும் கறுத்துட்டே பாண்டி நீ..."- என்றாள் அவள்.

"நீ இப்ப பட்டணத்துல வேலை பார்க்கலைன்னு யார் அழுதா?" -என்று ஒரு உடைந்த குரல் கேட்டது. பாட்டி பீச்சம்மாள் குரல்தான் அது.

"அக்கா! நான் போய் படுக்கறேன். பாட்டி அப்புறம் ஆரம்பிச்சுடுவாங்க. அப்பால என்னால பதில் சொல்ல முடியாது. நான் கிளம்பறேன்." -என்று ஓடினான்.

மீனாட்சியின் அறை. நன்கு பெரிதாகக் கட்டில், மேஜை, நாற்காலி, தண்ணீர்ப்பாவை, வெட்டிவேர்த்தட்டி அப்புறம் அதிசயமான அஜித்தின் படம் என்று வித்தியாச மாய் ஆச்சரியப்படுத்திற்று.

விசித்ரா அங்குள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள். மீனாட்சி அவளது ஜீன்ஸ் பேண்ட், டீ ஷர்ட்டையே பார்த்தபடி இருந்தாள்.

"என்ன பாக்கறே?"

"ஒண்ணுமில்லல. நீங்க ரொம்ப டிஃப்ரண்டா இருக்கிங்க."

"அப்படியா... பேண்ட் போட்டா டிஃப்ரெண்டா...?"

"ஆமாம். இங்கெல்லாம் அப்படித்தான்!"

"நீ என்ன படிக்கறே?"

"+2"

"குட்... அஜித் படம் ஒட்டியிருக்கியே. உனக்கு அஜித்துன்னா இஷ்டமா?"

"அது... அது..."

"ஆமா... டீ.வி. இல்லையா?"

"இருக்குது... கீழ ஹால்ல இருக்குது."

"நீ ஒண்ணு வாங்கி இங்க ரூம்ல வெச்சுக்கலாம்ல?"

"ஐயோ... அப்பாக்கு கீழ இருக்கற டீ.வி.யே. பிடிக்கலை. இதுல இங்க ஒண்ணுன்னா கொன்னுடுவார்.

"அப்படியா... அப்பான்னா ரொம்ப பயமோ?"

"ஆமா... நான் மட்டுமில்ல. ஊரே பயப்படும்."

"ஐ. சி... உங்கப்பாக்கு என்ன பிசினஸ்...?"

"பிசினஸெல்லாம் இல்ல. விவசாயம்தான். அப்படியே அப்பா வட்டிக்கு பணம் கொடுப்பாரு."

"அப்ப அதுக்கு பேர் என்னவாம்...?"



-விசித்ரா மடக்கின் மாதிரி கேள்வி கேட்டுட்டு சிரித்தாள். மீனாட்சி சற்று வழிந்தாள்.

"எவ்வளவு பணம் கொடுத்துருப்பாரு..."

"அதெல்லாம் தெரியாது. அது ஒரு பத்து பதினைஞ்சு லட்சம் இருக்கும்."

-மீனாட்சி வித்தியாசமாய் பதிலளித்தாள். ஆனால் விசித்ராவுக்கு மார்பு விம்மியது.

"ஆமா. நாளைக்கு பூஜை எங்க நடக்கப் போகுது?"

"இங்க வீட்லதான்..."

"விட்லையா... ஏதோ கோவில்ன்னு சொன்னாங்களே?"

"அதுவா... அது மல்லீஸ்வர அம்மன் கோவில். ஊருக்கு வெளிய சுடுகாட்டுகிட்ட இருக்குது. அங்க கடைசியாதான் போவோம்..."

"கடைசியான்னா...?"

"நாளைக்கு வீட்ல பொம்பளைங்கல்லாம் சாமி கும்புடுவோம். அப்புறம் வாசல்ல கூத்து நடக்கும். பொறவு சிலம்பு, குத்துச்சண்டையும் நடக்கும். பொறவு ஐம்பத்திரண்டு பேர் முளப்பாளி எடுத்துகிட்டு ஊர்வலமா மல்லீஸ்வரம்மா கோவில் போவோம்."

"அந்த கோவில்லதான் அந்த பொட்டி இருக்கா?"-விசித்ரா பொட்டியைப் பற்றிக் கேட்டதும் மீனாட்சிக்கு ஆச்சரியம் அள்ளியது.

"உங்களுக்கு அங்க பொட்டி இருக்கறதெல்லாம் தெரியுமா?"

"தெரிஞ்சுதானே வந்துருக்கேன்."

"எனக்கே அதுபத்தி கொஞ்ச நாளைக்கு முந்திதான் தெரியும்."

"அது என்ன அவ்வளவு பெரிய ரகசியமா என்ன?"

"ரகசியமில்ல. பயம்!"

"பயமா?"

"ஆமா... மல்லீஸ்வரம்மா கோவில் எப்பவும் மூடித்தான் கிடக்கும். இப்ப சாமி கும்புடும் போதுதான் திறப்பாக. மத்த நாள்ல கோவிலுக்கு வெளில ஒரு பலிபீடம் இருக்கு. அதுலதான் கல்பூரம் கொளுத்துவாங்க. யாரும் செருப்பு போட்டுட்டு அந்த பக்கம் நடக்கமாட்டாங்க."

"நடந்தா?"

"அவுகளுக்கு காச்ச குளிர் வந்துடும்பாங்க. அத்தோட அம்மா அங்க ரவைல நடமாடுதுன்னும் சொல்வாங்க."

விசித்ரா உடனேயே சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீங்க...? நான் சொல்றது நிஜம். மல்லீஸ்வரம்மா ரொம்ப சக்தி வாய்ந்தவங்க. மனசு உருக அவுகள கும்பிட்டா அவுக எதிர்க்க வருவகளாம். எங்கம்மா சொல்லியிருக்காங்க."

"அப்படியா...! ஆமா... அந்த பொட்டியில என்ன இருக்குது?"

"தெரியாது. ஆனா அதுக்குள்ள ஆத்தா உடுத்தியிருந்த புடவை, கருகுமணி இருக்குதுன்னு சொல்வாங்க." -மீனாட்சியின் பதிலே வித்தியாசமாய் இருந்தது. தெரியாது தெரியாது என்றே அவள் தெரிவித்த விஷயங்கள் விசித்ரா முகத்தில் ஒருவித தீர்க்கத்தை உருவாக்கின.



அவளோடு பேசிக் கொண்டே தன் டீ ஷர்ட்டை கழட்டினாள். டரையம்ப்ஸ் பிரேசியர் பளிச்சென்று தெரிந்தது. மீனாட்சிக்கே வெட்கமாகிவிட்டது.

"அய்யா... என்ன இது வெக்கமே இல்லாம இப்படி சட்டையை கழட்டறீங்க?" -என்று தலையை திருப்பிக் கொண்டாள்.

"நீ என்ன ஆம்பளையா...? என்ன மாதிரி பொம்பள தானே?" -படுகேஷுவலாய் சொல்லிக்கொண்டே பிரீஃப் கேசிலிருந்து ஒரு திருப்பூர் காற்றோட்டமான கை வைத்த பனியனை எடுத்து அணிந்து கொண்டாள்....

"பாடி நல்ல அழகா இருக்குது..."

"ஃபாரீன் பிரேசியர். ஐநூறு ரூபா ஒண்ணு!"

"ஆத்தாடி..." மீனாட்சியின் வண்டு விழிகள் பெரிதாயிற்று.

"உனக்கு வேணுமா?"

"வேணாம் வேணாம். எனக்கு புதுக்கோட்டை போகும் போது அக்கா வாங்கிட்டு வந்துடும்."

"ஆமாம்... நீ சென்னை வந்துருக்கியா?"

"வந்துருக்கேன். ஒரு வட்டம்..."

"ஒரு வட்டமா... அப்படின்னா..."

"அதாவது ஒரு வட்டம் ச்சீ... ஒரு தடவை வந்திருக்கேன்னு சொன்னேன்."

"நல்ல பாலஷ... நீங்கள்லாம் இன்னும் 1940லையே இருக்கீங்க."

"பழச மறக்கக்கூடாதுன்னு அம்மா சொல்வாங்க. சரி நீங்க தூங்குங்க. நான் வரேன்."

-மீனாட்சி அகலப்பார்த்தாள்.

"ஏய் ஒரு நிமிஷம்."

"என்னங்க?"

"அந்த மல்லீஸ்வர அம்மன் கோவில் எங்க இருக்குன்னு சொன்னே?"

"சுடுகாட்டுகிட்ட..."

"சுடுகாடு?"

"ஊருக்கு தெக்கால..."

"இப்படி சொன்னா எப்படி... இங்க எது கிழக்கு எது மேற்கு?"

"இதோ இதுதான் கிழக்கு... இது தெக்கு."

"அதுசரி... கோவில் ரொம்ப தூரமா?"

"சேச்சே... தூரமெல்லாம் இல்லை. அதான் நாளைக்கு போகப்போறோம்ல."

"அது சரி... இருந்தாலும் நான் ஊரை ஒரு ரவுண்ட் அடிக்கும்போது அப்படியே பார்க்கலாம்னு நினைக்கிறேன்."

"பாத்துங்க... செருப்புக்காலோட போயிறாதீங்க. அப்புறம் அந்த கோவில்ல ஒரு வாழும் பாம்பு ஒண்ணு இருக்குது. அது கண்ணுல பட்டா உழுந்து கும்புடணும்னு சொல்வாங்க. இல்லாட்டி அது தேடி வந்து கொத்திப்பிடுமாம்."

"பரவால்ல... உங்க காதுலல்லாம் நல்லாவே பூ சுத்தி வெச்சிருக்காங்க. சரி நீ போய் படு. காலைல பாக்கலாம்." -விசித்ரா அவளை ஆழம் பார்த்து முடித்துவிட்டு சோம்பலை நெட்டி முறித்தாள்.



பிறகு ஞாபகமாய் போய் கதவை அடைத்து விட்டு வந்து செல்போனை கையில் எடுத்தாள்.

"ஹலோ பாஸ்..."

"........"

"அமக்களமா வந்து செட்டிலாயிட்டேன். என்னை இன்னும் பத்திரிக்கைக்காரியாவே நினைச்சுக்கிட்டிருக்கான் பாண்டியன். நான் அந்த வேலையை விட்டுட்டது தெரியாது. ஸோ ரொம்ப கம்ஃபர்ட்டபிளா இருக்கு."

"........"

"இங்க எல்லாரும் ரொம்ப ஃபூலிஷ்ஷா இருக்காங்க. கொஞ்சம் ஜமீன்தனமும் இருக்கு."

"............"

"அதை எல்லாம் நான் பாத்துக்கறேன். இன்னும் ஒரு சில மணிநேரத்துல அந்த பெட்டியை திறந்து பார்த்திடுவேன். உள்ள நீங்க சொன்ன மாதிரி புடவை இருந்தா அந்த நிமிஷமே சுட்டுடுவேன்.

டோன்ட் ஒர்ரி... ஆனா இருக்கணும். எனக்கென்னவோ நம்பிக்கை இல்லை. நீங்க யாரோ சொன்ன அம்புலிமாமா கதையை கேட்டு தேவையில்லாம எனக்கு இந்த அசைன்மென்ட்டை கொடுத்திருக்கீங்க. ஒரு முக்கியமான விஷயம்... புடவை இருந்தாலும், இல்லேன்னாலும் எனக்கான பணம் வந்தாகணும். ஞாபகம் வெச்சுக்குங்க. அந்த கோவில்ல பாம்புங்கள்லாம் வேற இருக்குதாம். கடிச்சு வெச்சா நான்ல சாகணும்?"

"........"

"சரி சரி... நான் எப்படிப்பட்டவள்னு தெரியும்ல... சப்போஸ் அந்த அம்புலி மாமா கதை உண்மையாயிருந்து

உள்ளே புடவை இருக்குன்னா புடவையோட ரேட்ல ஐம்பது பர்சன்ட் எனக்கு வந்தாகணும். ஞாபகம் இருக்கட்டும்.

"........."

"ஓ.கே.வை... again பெட்டிய திறந்து பாத்துட்டு போன் பண்றேன். இப்ப இங்க இருந்து கம்பி நீட்டணும். அதுதான் எப்படின்னு யோசிச்சுகிட்டிருக்கேன். இந்த ராத்திரியிலையும் பந்தல் அலங்காரம், தெருக்கோலம்னு தெருவே முழிச்சுக்கிட்டு இருக்கு. படுத்து தூங்கமாட்டாங்க போல தெரியுது. பார்ப்போம். விசித்ரான்னாலே வெற்றிதான். எதாவது வழி கிடைக்காமலா போயிடும்?"

-கேள்வியோடு செல்போனை ஆஃப் செய்தாள். பின் அதை அந்த ஹோல்டான் பேக்கில் வைத்துவிட்டு அதையே சில நொடிகள் வெறித்துப்பார்த்தாள்.

அப்படியே பின்னால் சென்று ஜன்னலைத் திறந்து வெளியில் பார்த்தாள். ஜன்னலுக்கு அந்தப் பக்கமாக ஒரு ஐந்தடி கீழே ஒரு ஓட்டுக்கூரைச்சரிவு, சரிவின் முடிவில் வீட்டின் கொல்லைப்புறம், கொல்லைப்புறத்தில் ஒரு கோலி பல்ப் எரிந்து கொண்டிருந்தது. சற்று தள்ளி மாட்டுத் தொழுவம். அதில் மதர்ப்பமாய் பல மாடுகள். வாலைக் குழைத்தபடி சில நின்று கொண்டும், சில படுத்துக் கொண்டுமிருந்தன.

கொல்லை மதில் சுவரில் ஒரு மரக்கதவு. இதுபோதுமே..!' - அவள் உள்மனதில் உற்சாகம் ஒரு கூவல்.

## 8

**ஹி**தாயத் புறப்படுவதற்கு தயாராகிவிட்டார். வள்ளலின் வீட்டு வாயிலில் அவரது சாரட் வண்டியும்



சகாக்களும் புறப்படத் தயாராக நின்று கொண்டிருந்தனர். ஹிதாயத்தும், வள்ளலும் வீட்டை விட்டு வெளியில் வந்தனர். வள்ளலின் உறவுக்கார பெண்களும், மற்றவர்களும்கூட வாயிலுக்கு வந்து ஹிதாயத்தை வழி அனுப்பத் தயாராகினர்.

"வள்ளலே... நான் புறப்படுகிறேன். உங்கள் உபசரிப்பில் நான் பூரித்து விட்டேன். என்னை திக்கு முக்காட வைத்து விட்டீர்கள். எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை."

"அப்படி எல்லாம் சொல்லக்கூடாது. விருந்தினர்களை உபசரிப்பது எப்பொழுதும் நமது கடமையல்லவா. டெல்லி வந்தபோது நீங்கள் என்னை திணற அடிக்கவில்லையா?"

"நல்லது. அனைவருக்கும் நன்றி. இன்ஷா அல்லாஹ் அல்லாவின் திருநாமத்தாலே நமது நட்பு இன்று போல என்றும் திகழட்டும். அரண்மனையில் ராணியாரிடமும் கூறிவிடுங்கள்."

"நிச்சயமாக... பார்த்துச் செல்லுங்கள். பகற்பொழுதில் மட்டும் பயணம் செய்யுங்கள். இரவில் சத்திரம் சாவடிகளில் தங்கிவிடுவது நல்லது. ஏனென்றால் புதிதாக கள்ளர்கள் புறப்பட்டிருக்கிறார்கள்."

"என்னது...? உங்கள் ராஜ்ஜியத்தில் கள்ளர்களாக? ஆச்சரியமாக இருக்கிறதே!"

"தேவதேவனே வந்து ஆட்சி நடத்தினாலும் ஏறுக்கு மாறான புத்தியும், குறுக்கு வழிநாட்டமும் உடையவர்கள் இருக்கத்தானே செய்வார்கள்."

"அது சரி... உங்கள் அரசர் கிழவன் சேதுபதி வீரதீரர் ஆயிற்றே. அவரால் கூடவா கள்ளர்களை ஒழிக்க முடியவில்லை?"

"அவரால்கூட துரத்தத்தான் முடிந்தது. ஒழிக்க முடியவில்லை. இப்பொழுதுகூட அவர்கள் ராமநாதனபுர எல்லைக்குள் வாலாட்ட மாட்டார்கள். நீங்கள் பரமத்தியை தாண்டும் வரை கவலையில்லை. அதற்குப் பிறகுதான் எச்சரிக்கை தேவை. எதற்கும் படைவீரர்களை அனுப்பித் தரவா?"

"வேண்டாம். அல்லா துணை நிற்பார். நான் வருகிறேன்."

–ஹிதாயத் வள்ளலைக் கட்டி அணைத்து அன்பைச் சொரிந்து விட்டு கோச்சில் ஏறி அமர்ந்தார். கோச்சு வண்டி ஓடத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து. அவரது சரக்கு வண்டி. அதில் அந்த தங்கப்புடவைப் பெட்டி!

**ஊ**ர்ப்பொட்டலில் ஊரே கூடியிருந்தது. விஜய வல்லப சேதுபதியின் சடலம் அவர்களுக்கு நடுவில் மெல்ல நீந்தி வந்து சிதை குழியில் கிடத்தப்பட்டது. கூடவே மொட்டையடிக்கப்பட்ட நிலையில் அக்னிப் பானையுடன் மருதப்பசேதுபதி.

அழுது அழுது அவன் முகம் வீக்கம் கண்டிருந்தது. அவனைத் தொடர்ந்து ஒரு பூப்பல்லக்கில் மல்லீஸ்வரி அழைத்து வரப்பட்டாள். வழி எங்கும் பூக்கள் சிதறிவிழ அவள் பல்லக்கு வந்தபோது ஊரே விக்கித்துப் போய் வெறித்துப் பார்த்தது. சிலர் அவள் காலில் விழுந்து வணங்கினர். இதனால் பல்லக்கு தேங்கி நின்று தேங்கி நின்று பொட்டலை அடைவதற்குள் பொட்டலில் சேதுபதியின் ஈமக்ரியைக்கான காரியங்கள் தொடங்கிவிட்டன.

கூட்டத்திடம் மெல்லிய சலசலப்பு. மருதப்ப சேதுபதி சிதையை சுற்றி வந்து நீர்க்குடம் உடைத்தான். பின் உரிப்பானை வாய்க்கரிசியை எடுத்து வந்து வாயில் போட்டான். அவனைத் தொடர்ந்து சேதுபதி வம்சா



வளியைச் சேர்ந்தவர்கள் மட்டும் வரிசையில் நின்று வாய்க் கரிசியை சேர்த்தனர். மற்றவர்கள் கலயங்களில் கொண்டு வந்திருந்த நெய்யினை சிதை விறகின்மேல் கொட்டிவிட்டு அழுதபடி சென்றனர்.

சுற்றி நிற்பவர்களில் பலர் பூக்களை வாரி இறைத்து சேதுபதிக்கு கட்டியம் சொல்லிக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் நாகரா முழக்கப்பட பல்லக்கில் இருந்து மல்லீஸ்ரி இறங்கி அழைத்து வரப்பட்டாள். இரண்டு இரணடு பெண்களாய் அவளை சிறிது சிறிது தூரம் அழைத்து வந்து பொட்டலின் எல்லையில் விட்டு விட்டு விலகிக் கொள்ள, இறுதியாய் அவளை பொட்டலில் காவலன் மனைவி கைத்தாங்கலாய் தாங்கிக் கொண்டாள். சாங்கியப்படி அவளுக்கு ஒரு வெள்ளிமுறத்தில் நெல்லும், வெல்லமும் அளிக்கப்பட அதை வாங்கிக் கொண்டவள் மல்லீஸ்வரியை மெல்ல சிதைக்கு மேல் உள்ள மேடைக்கு அழைத்துச் செல்லத் தொடங்கினாள்.

கூட்டத்திடம் பேரமைதி.

நாகரா மட்டும் 'தும்... தும்...' என்று சீரான இடைவெளியில் சப்தித்த படி இருந்தது. மல்லீஸ்வரியும் சிதைக்கு மேலான கறுப்புத்துணி கூரையுடன் கூடிய மேடைமேல் போய்நின்றாள்.

உடம்பில் பொட்டு நகை இல்லை. எல்லாம் அகற்றப் பட்டு– தண்ணீரில் இருந்து பிடுங்கி எடுத்த வெள்ளைத் தாமரைபோல்– வெள்ளை உடையில் அனைவரையும் பார்த்து கைகளைக் கூப்பி வணங்கினாள்.

"மாதா மல்லீஸ்வரி..." –என்று கூட்டமும், ஆரவாரம் செய்தது. "போற்றி... போற்றி" என்கிற எதிரொலிகள் திரும்ப ஒலித்தன.

மருதப்ப சேதுபதி சிதை மேடையை ஒட்டி கையில் தீப்பந்தமுடன் தயாராக இருந்தான். நிமிர்ந்து அம்மாவைப் பார்த்தான்.

பார்வை 'அம்மா! வேண்டாம் அம்மா! எங்களோடு இருந்து விடம்மா...!' என்று கெஞ்சியது. அவளும் மகனைப் பார்த்தாள். கண்களை கண்ணீர் திரையிட்டது.

நெடுந்தூரத்தில் தடுத்து நிறுத்தப்பட்ட மகளிரின் குரல் "அம்மா..." என்று அவள் காதைத் தேடி வந்தது. ஒரு க்ஷணம் பாசத்தால் உடம்பு நடுங்கியது. திரும்பி விடலாம் என்றுகூடத் தோன்றியது. இருந்தும் மரபை நினைத்துப் பார்த்தாள்.

மறவர் குலத்தில் ஒவ்வொரு பெண்ணுமே பதிவிரதா ரத்தினங்கள். கணவன் யுத்தகளத்திலும் அடுகளத்திலும் வீரம் காட்டினால் பதில் வீரத்தை இதுபோன்ற தருணத்தில் காட்டியவர்கள். வாழ்க்கை என்பது உயிரோடு இருக்கும்போது மட்டுமில்லை. அது மறுமையிலும் தொடர்வதை உலகிற்குக் காட்டுபவர்கள். கணவன்-மனைவி உறவு எத்தனை புனிதமானது என்பதற்கு இந்த உடன்கட்டையை விடவா ஒரு பெரிய சான்று இருந்துவிட முடியும்?

அவள் மீண்டும் ஒருமுறை வரலாற்றை நினைத்துப் பார்த்தாள். அப்படியே அங்கிருந்தபடியே பேசினாள்.

"மகனே... நான் உன்னை விட்டும் எங்கும் போய்விட மாட்டேன்... என் உடல் தான் தீக்கிரையாகப் போகிறது. ஆனால் நான் எதற்கும் இரையாக மாட்டேன். என்னோடு இந்த பரம்பரைக்கே கைம்பெண்கள் முடிந்து போவார்கள். இனி ஒருவரை நான் கைம்பெண்ணாக்க விடமாட்டேன். நமது பரம்பரையில் உள்ள ஆடவர்களை எனது ஆத்மா எப்பொழுதும் காவல் காத்தபடி இருக்கும். நான் ஒரு பெரிய திருப்பணியை செய்யத்தான் போகிறேன். என்



போல் சதிமாதாக்களை தொழும் எந்த ஒரு பெண்ணும் கைம்பெண்ணாக மாட்டாள். அந்த உறுதியை ஆத்ம பூர்வமாய் தருகிறேன். நீயும் உள் வாழ்நாளில் உன் மனைவியிடம் உண்மையாகவும் அன்பாகவும் இரு! நமது சந்ததியில் எந்த ஒரு பெண்ணும் கண்ணீர் விடக்கூடாது. யாருக்கும் எனக்கு நேர்ந்தாற்போன்ற ஒரு முடிவு வந்து விடக்கூடாது. தப்பான விதி என்னோடு முடிந்து போகட்டும்." -என்று உரக்கக் கத்திப் பேசினாள்.

அந்த துக்கத்திலும் தெளிவாக அவள் பேசியதைக் கேட்டவர்கள் விக்கித்துப் போனார்கள். ஊர்த்தலையாரி மண்டியிட்டு கும்பிட்டார் அவளைப் பார்த்து. அவர் கண்களிலும் கண்ணீர் பிரவாகம்.

"ம்... சிதைக்கு கொள்ளியைப் போடு..." -என்று காரியகர்த்தா மருதப்பசேதுபதியை பார்த்துச் சொன்னார்.

மருதப்பனும் கைகள் நடுங்க கொள்ளியிட்டான். சிதை குபீரென்று பற்றிக்கொண்டது. அடுத்த நொடியே மருதப்ப சேதுபதி மயங்க அவனைக் காரிய கர்த்தர் கட்டித் தூக்கியபடி அங்கிருந்து விலக நாகரா தொடர்ந்து சப்தித்தது.

அது வேகமாய் இயங்கும்போது குலவை சப்தமும் காதில் விழுந்தது. மல்லீஸ்வரி கைகளைக் கூப்பி கண்களை மூடிக்கொண்டாள். அண்ணாந்து வானத்தைப் பார்த்தாள். இறந்துவிட்ட விஜயவல்லப சேதுபதி மேகங்களிடையே காத்திருப்பது போல் ஒரு பிரமை அவளுக்குத் தோன்றியது.

அடுத்த க்ஷணம் சரேலென்று எரியும் சிதைக்குள் குதித்தாள் மல்லீஸ்வரி.

அரைபனை உயரம் எரிந்த சிதைக்குள் அவள் உயரம் என்ன ஆனது என்றே தெரியவில்லை. கூட்டம் பிரமித்துப் போய்விட்டிருந்தது.

பலரது கண்களில் கண்ணீரின் பிரவாகம்!

## 9

ஊர்ப்பொட்டல்! அதை ஒட்டிய சுடுகாடு. மூலையில் ஒரு சடலம் வெந்து முடிந்து சன்னமாய் கனன்று கொண்டிருந்தது. மயானத்தானைக்கூட காணவில்லை.

அடர்ந்த மரக்கூட்டத்தில் அவ்வப்போது சில கோட்டான்கள் மட்டும் சில வினாடிகளுக்குக் கத்திவிட்டு இறகுகளுக்குள் அலகைவிட்டு உடம்பை உரசிக் கொண்டன.

மற்றபடி பம்மென்று அமைதி.

எப்படியோ அதுவரை வந்து விட்டாள் விசித்ரா. அசாதாரண பெண்!

சுடுகாட்டின் முகப்பில் நின்று இடிந்த மதில்சுவர் மேல் ஒரு கையை வைத்தபடி உள்ளே ஒரு பார்வை பார்த்தாள். பின் திரும்பி எங்கே அந்த மல்லீஸ்வரம்மன் கோவில் என்று ஒரு தேடல் நிகழ்த்தினாள்.

காலில் ஹைஹீல்ஸ் செருப்பு.

நடக்கையில் சருகுகள் மிதிபட்டு தங்களுக்கும் உயிர் இருக்கிற மாதிரி ஐயோ என்பதுபோல அதன் பாஷையில் சப்தம் போட்டன. ஒரு ஓரமாய் இரையை விழுங்கிவிட்டு பிரளமாட்டாமல் பிரண்டபடி ஒரு மஞ்சள் சாரை. அதால் தலையைக்கூட பெரிதாய் உயர்த்த முடியவில்லை. விசித்ராவும் அதைப் பார்த்து பெரிதாய் அஞ்சாமல் ஒதுங்கி நடந்தாள். தோளில் அந்த ஹோல்டான்பேக் தொங்கியபடி இருந்தது. அதை இடது கரம் அடக்கிப் பிடித்திருந்தது.

சருகுகள் சரசரக்க நடந்தவள் ஒரு மூலையில் ஒரு கட்டிடம் தெரிவதைப் பார்த்தாள். அடர் இருட்டில் கரிக்கட்டி போல கண்ணைக் கரித்தது. பேக்கில் இருந்து டார்ச்லைட்டை எடுத்து நிமிர்த்தி நீட்டினாள்.



வெளிச்ச வட்டம் அதுதான் மல்லீஸ்வரி கோவில் என்றது. மாட்டுக் கொட்டகை போல மிகச் சிறிய கோவில். கோபுரமும் மிகச்சிறியதாக இருந்தது. அதை சமீபித்தாள்.

கோவில் வாசலில் கோலமிடப்பட்டிருந்தது. சில அகல் விளக்குகள் எரிந்து அணைந்திருந்தன. பெரிய கிரில் கதவு. மூடப்பட்டு கோத்தேஜ்பூட்டு தொங்கியது.

கிரில் இடைவெளியில் உள்ளே பத்தடிக்கு பத்தடி சதுரத்தில் ஒரு காலியிடம். அதைக் கடந்து மரக்கதவு பூட்டின சன்னதி.

பூட்டை உடைக்காமல் அதனுள் போக முடியாது என்று தோன்றியது. வேறு வழி இருக்கிறதா என்று பார்க்க சுற்றி வந்தாள். ஒரு வேங்கை மரம் கோபுரத்துக்கு மேல் கிளையைப் பரப்பி இருந்தது. அதில் ஏறி உள்ளே குதிக்க வழி இருந்தது. ஹோல்டான் பேக்கைத் திறந்தாள். உள்ளே சுருட்டி வைக்கப்பட்டிருந்த சில மீட்டர் நீள பிளாஸ்டிக் கயிறு. அதன் நுனியில் பேக்கில் கிடந்த ஹேர் பிரஷ்ஷை கட்டியவள், அதோடு வேங்கை மரம் மேல் ஏறினாள். சர்வதேச அளவில் மரம் ஏற பயிற்சி பெற்றவளைப் போல் கிளைகளில் பதவிசாக தவழ்ந்தவள் கோபுரத்துக்குக் கீழே பிளாஸ்டிக் கயிற்றை தொங்க விட்டுவிட்டு பிரஷ்ஷை கட்டிய பகுதியை வாகாகப் பிடித்துக் கொண்டு குதித்தாள். கிளையும் தழைந்து கொடுத்தது. கால்கள் கோபுரச் சரிவினைத் தொட்டன. அப்படியே கயிற்றுப் பிடியை விட்டவள் உள்ளே குதித்தாள். பூட்டை உடைக்காமலே உள்ளே குதித்தாயிற்று. நல்லவேளையாக மரக்கதவு பெரிதாய் படுத்தவில்லை சங்கிலிகளால் அதை கட்டியிருந்தார்கள். அதை அசைத்தபோது சப்தம் தாராளமாகக் கேட்டது. ஆபத்து என்றது உள்ளம். டார்ச்சை அநத மரக்கதவின் டைமண்ட் வடிவ இடைவெளி வழியாக உள்ளே விட்டாள். வட்டவெளிச்சத்தில் உள்ளே பெட்டி

யும் அதன்மேல் காய்ந்த மாலைகளும் தெரிந்தன. உள்ளே மரக்கதவைத் திறந்துகொண்டு போகாமல் பெட்டியை இழுத்து கதவருகே கொண்டு வந்து திறந்து பார்க்க வழி இருப்பது தெரிந்தது.

திரும்பினாள். அதிர்ஷ்டம் அவளுக்குப் பக்கத்திலேயே ஒரு மூங்கில் கம்பை போட்டிருந்தது. அதை எடுத்து கம்பை உள்ளே நுழைத்து பெட்டியை அசைக்க முயன்றாள். அதுவும் மெல்ல அசைந்தது. பாரம் அதிகம் என்பதை பெட்டியை அசைக்கையில் உணர முடிந்தது.

பெட்டியும் மெல்ல மெல்ல நகர்ந்து காய்ந்த மாலைகள் உதிர அவளுக்கு சமீபத்தில் வந்தது. அதன்பின் கையை நீட்டி அதன் கொண்டியைப் பிடித்து இழுத்ததில் மரக் கதவை உரசிக்கொண்டு அது வந்தே விட்டது.

அவளையும் பெருமூதுச்சு ஆக்ரமித்து அழுத்தியது. சற்று ரிலாக்ஸ் செய்து கொண்டவள் பெட்டி பூட்டப்பட்டிருக் கிறதா என்று பார்த்தாள். ஆச்சரியம்! பூட்டுக்கு பதிலாக ஒரு மஞ்சள் துணியால் அதைக் கட்டிப்போட்டிருந் தார்கள். வேகவேகமாக அதை அவிழ்த்தாள்.

படபடமாக இருந்தது. இதயமும் ஏதோ ஒலிம்பிக்கில் ஓடும் வீராங்கனையிடம் துடிக்கிற மாதிரி துடித்தது. மஞ்சள் துணியின் கட்டு அவிழ்க்கப்பட பெட்டியின் மூடிப்பாகத்தை மெல்ல உயர்த்தினாள்.

"சக்சரக்சக்' ...' என்கிற சப்தமுடன் திறந்து கொண்ட அந்த பெட்டியின் உள்ளே டார்ச் ஒளி ஓடிப்பாய, உள்ளே...

## 10

பொட்டலில் சிதை சாம்பலபாய் அவிந்து அடங்கி விட்டிருந்தது. அதை அப்படியே அள்ளி மண்கலயத்தில்



போட்டுக் கொண்டிருந்தான் மருதப்ப சேதுபதி. பின் குழியை விட்டு வெளியே வந்தான். உறவினர்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

அருகிலேயே கல்தூண்கள் நிறுத்தப்பட்ட நிலையில் மேலே கூரை மட்டும் வேய வேண்டும் என்பது போல கல்மண்டபம் தயாராக இருந்தது. நடுவில் ஒரு மேடை. அதில் ஒரு பெட்டி தயாராக இருந்தது. அது திறந்தே இருந்தது. அதில் கலயத்தைக் கொண்டு சென்று வைத்தான். அதன் வாயை ஒரு துணியால் கட்டி மூடினாள்.

தொடர்ந்து மல்லீஸ்வரியின் கருகமணி 'நகை நட்டுகள்' அவள் இறுதியாக அணிந்திருந்த புடவை எல்லாம் அதனுள் வைக்கப்பட, பெட்டியை மூடினார் காரியக் காரர். பின் அதை எல்லோரும் சுற்றி வந்தனர். இறுதியாக பெட்டியின் முன் மூன்று கலயங்கள் வைக்கப்பட்டன. ஒன்றில் வழிய வழிய பால், ஒன்றில் பன்னீர், ஒன்றில் ராமேஸ்வரத்து நாழிக்கிணறுகளின் தண்ணீர்.

காரியக்காரர் சாங்கியத்தைத் தொடர்ந்து நடத்தத் தொடங்கினார். உச்சி வானில் சூரியனும் நடப்பதைப் பார்க்க விரும்பியவனாக மேகம் விட்டு விலகி வந்து எட்டிப்பார்த்தான்.

அதே சமயம் அங்கிருந்து நாலுகல் தொலைவில் பட்டு வியாபாரி ஹிதாயத்தின் சாரட்டும், சரக்கு வண்டியும் விரைந்தபடி இருந்தன...

இருபுறமும் புளிய மரக்காடு. நடுவில் மெத்தி எடுத்த மண்சாலை!

ஹிதாயத்தின் சாரட் சீரான வேகத்தில் ஓடிக்கொண் டிருக்க பின் தொடர்ந்து கொண்டிருந்தன அவரது சகாக் களின் வண்டிகள்.

திடீரென்னு அந்த சாரட்டுகளின் மேல் எங்கிருந்தோ எரி அம்புகள் வந்து விழத் தொடங்கின. சாரட்டின் படுதாவிலும் குதிரைகள் மேலும் அவை பட குதிரைகள் திணறிப்போய் திருகலாய் கீழே விழுந்தன. படுதாக்களும் பற்றி எரிய சாரட்டே நிலைகுலைந்து கவிழ ஆரம்பித்தது. ஹிதாயத்தும் சாலையில் உருண்டு விழுந்தார். அவரது சகாக்களும் மலையில் இருந்து பிரண்டு வரும் கற்களைப் போல அங்கங்கே உருண்டு விழ சரக்குகளும் தீப்பற்றிக் கொண்டன.

அதே வேளையில் ஒவ்வொரு புளியமரத்தண்டின் பின்னால் இருந்தும் ஒவ்வொரு கள்ளன் வெளிப்பட்டு அவர்களை சூழ்ந்து நிற்கத் தொடங்கினர். அதில் ஒரு ஒற்றைக்கண் கள்ளன் தனது ஒற்றைக் கண்ணால் கூர்மையாக விழுந்து கிடக்கும் சரக்கு மூட்டைகளை தேடலுடன் பார்த்தான். அதில் அந்த தங்கப்புடவை உள்ள பெட்டியும் சேர்ந்தே விழுந்து கிடந்தது. விழுந்த வேகத்தில் பெட்டியில் இருந்து தனியே அந்தப் புடவை வெளியில் விழுந்து கிடந்தது. அதன் நுனியில் தீயின் தாக்கம். ஓடிப் போய் அதை கைகளால் அணைத்தபடி அந்தப் புடவை யைத் தொட்டு எடுத்தான்.

“புலியா... இருளா.... இதோ தங்கப்புடவை. கிடைச் சிடிச்சுடா... கிடைச்சுடுச்சு...' என்று உடனே தனது இடி போன்ற குரலில் பலமாய் கத்தினான். ஹிதாயத்தும் அதைக் கேட்டபடி தடுமாறிக் கொண்டு எழுந்திருந்தார். அவரது சகாக்கள் ஒரு ஓரமாக முனகியபடி கிடந்தனர்.

ஹிதாயத் தடுமாறிபடி தலையில் பட்ட அடியோடு புடவையைப் பிடித்தபடி இருக்கும் கள்ளனை நோக்கி வந்தார்.

“ஐயா... வேண்டாம். அந்தப் புடவையை அபகரிக்கும் முயலாதீர்கள். அது ஆபத்தான புடவை...” -என்றார்.



அடுத்த நொடியே அவரது அடிவயிற்றில் அவனது கட்டாரி பாய்ந்தது.

ஹிதாயத் கண்கள் செருக சுருண்டு விழ அதைப் பார்த்தபடியே அவரது சகாக்களில் ஒருவன் எழுந்திருக்க, முயன்றான். அவனை நோக்கி ஒரு கட்டாரி அசுர வேகத்தில் பாய்ந்தது. அது மிகச்சரியாக அவன் கழுத்தில் குத்தி அவனை அப்படியே சாய்த்தது.

புடவையை ஏந்தியபடி உள்ள கள்ளன் வானமே அதிரும்படி சிரித்தான். அப்படியே அந்த புடவையை விரித்து தோள்மேல் ஒரு பொன்னாடை போல போர்த்திக் கொண்டான்.

சுற்றி சுற்றி வந்தான். மற்ற கள்ளர்கள் கைகொட்டி சிரித்தனர். நடுநடுவே எழுந்திருக்க முயன்ற உதவியாளர் களை கட்டாரியை பாய்ச்சியே அழித்தனர்.

ஒரு பெட்டியில் ஹிதாயத்துக்கு அளிக்கப்பட்ட பொற்காசுகள் இருந்தன. அதை ஒருவன் அள்ளி ஆனந்தப்பட்டான்.

“காளிங்கா... அற்புதமான வேட்டை. இனி பல வருஷங் களுக்கு கவலை இல்லை...” - என்று எக்காளத்தோடும் குதித்தான். சட்டென்று அவர்கள் முகத்தில் பலத்த மாறு தல். சற்று தொலைவில் பல குதிரைகள் ஒன்றாய் ஓடி வரும் சப்தம்.

“ஏய்...! யாரென்று பார்... யாரோ கூட்டமாய் வருகிறார்கள்.” என்றான் ஒருவன். அதைத்தொடர்ந்து ஒருவன் பக்கத்தில் வளர்ந்திருந்த ஒரு பனைமரத்தில் விறுவிறுவென்ற ஏறினான். முக்கால்தூரம் ஏறியவன் ஏறிய வேகத்தில் மேலிருந்து சறுக்கியபடி கீழிறங்கினான். கையி லும் காலிலும் பனை மரத்தண்டின் சிள்ளுகள் சிராய்த்து

விட்டிருந்தன. அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அலறினான்.

"ஏய்... சேது நாட்டு காவல் படை வந்துகிட்டிருக்கு. நம்மளைப் பாத்தா அவ்வளவுதான்." -அவன் சொல்லி முடிக்கும் முன் அந்தப் பாதையில் ஆரம்பமான சேது நாட்டு காவல்படை வீரர்களின் கம்பரத் தோற்றம் அவர்கள் தோள்களிலும் துப்பாக்கிகள்.

"ஏய் ஓடுங்கடா..." - எல்லோரும் கத்தியபடி ஓடினர். பொற்காசுப் பெட்டியோடு ஒருவனும், தங்கப்புடவை யோடு ஒருவனும் தலை தெறிக்க காட்டுக்குள் புகுந்து ஓடினர். அதைப் பார்த்த வீரர்களும் தங்கள் குதிரைகளை அவர்களை நோக்கிச் செலுத்தத் தொடங்கினர்.

ஒரு அசுரவேட்டை ஆரம்பமாகிவிட்டது. தங்கப்புடவை யோடு ஓடுபவன் ஓடும்போதே அதை சுருட்டி மடக்கி கையில் இறுக்கமாய் பிடித்துக் கொண்டான். அடர்ந்த மரக்காடு மிக வசதியாக ஒத்துழைத்தது.

ஆனாலும் மூச்சிறைத்தது. நின்று பதுங்கி மூச்சினை இழுத்து வாங்கி தாண்டி ஓடியும் காவல்படை வீரர்கள் விடுவதாயில்லை. அவர்கள் வசம் சிக்கினால் அவ்வளவு தான். நிச்சயமாக ஊர் மைதானத்தில் நிறுத்தி தலையை வெட்டிவிடுவார்கள். புடவையோடு ஓடியவனுக்கு மூச்சிளைத்தது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய் விடுமோ என்று பயமாகிப் போனது.

ஓடு... ஓடு... என்று கால்களும் ஓடின. குதிரைக் குளம்படிச் சப்தமும் தொடர்ந்து கேட்டபடி இருந்தது. நடுநடுவே சில துப்பாக்கித் தோட்டாக்கள் சீறும் சப்தமும் கேட்டது.

காவல்படை வீரர்கள் கள்ளர்களில் சிலரை சுட்டு வீழ்த்தி விட்டதை அந்த கள்ளனால் உணரமுடிந்தது.



அப்பொழுதுதான் மல்லீஸ்வரி உடன்கட்டை ஏறிய அந்த ஊரின் பொட்டலும் கல்மண்டபமும் கண்ணில் பட்டது. அதன் முன் சாங்கியங்கள் முடிந்த நிலையில் எல்லோரும் கலைந்து கொண்டிருந்தனர். சதிமாதாவின் வஸ்திராபரணப் பெட்டி மட்டும் கல்மண்டபம் நடுவில் மாலைசுட்டப்பட்டு விளக்குகள் எரிய கண்ணில் பட்டது.

அந்தக் கள்ளனுக்குள் சட்டென்று ஒரு எண்ணம். தாமதிக்காமல்அந்த பெட்டியை நோக்கித் தான் ஓடினான். நல்ல வேளையாக யாருமில்லை. மளமளவென்று மஞ்சள் துணியால் கட்டப்பட்ட அதன் மூடியைத் திறந்து தன் வசமுள்ள தங்கப்புடவையை உள்ளே வைத்தான். வைத்து விட்டு திரும்பவும் பெட்டியை மூடி துணியால் கட்டியவன் எழுந்து நின்று பெருமூச்சுடன் பார்த்தான். திரும்பவும் குதிரைக் குளம்புடி சப்தம். மிக அருகிலேயே கேட்டது. ஓட ஆரம்பித்தான். ஆனால் சற்று நேரத்தில் எல்லாம் அவன் மேல் தோட்டா ஒன்று பாய்ந்து அவன் உயிரையும் வாங்கிவிட்டது.

அந்த பெட்டி மட்டும் ஒரு மகத்தான செல்வத்தை தன்னுள் வாங்கிக் கொண்ட நிலையில் மௌனமாய்....

**வி**டிந்து விட்டது! கையில் காபிக்கு வளையுடன் மீனாட்சி அறைக்கதவை தட்டினாள். கொட்டாவி பிரிய விசித்ராவும் கதவைத் திறந்தாள். கையில் ஏதே கட்டு.

"குட் மார்னிங்!" -என்றாள். மீனாட்சி பதில் குட்மார் னிங் சொல்லத் தெரியாமல் சிரித்தாள்.

"காபி..." என்றாள். வெளியே கொட்டு மேளச்சப்தம் கொட்ட ஆரம்பித்திருந்தார்கள்.

காபியை வாங்கியபடியே விசித்ரா கேட்டாள்.

"அது என்ன சப்தம்?"

"கொட்டும் மேளம்... கேட்டதில்லையா நீங்க?"

"ஓ.... இதுதானா அது?"

"ஆமாம்... நல்லா இருக்கும். ஆட்டமும் ஆடுவாங்க. குளிச்சுட்டு வாங்க. பாக்கலாம்." - என்றாள் மீனாட்சி.

"வரேன்... வரேன்..." என்றவள் கையில் ஒரு கட்டு.

"என்ன கைல கட்டு?" -மீனாட்சி அப்பொழுதுதான் கட்டைப் பார்த்தாள்.

"அது... வேற ஒண்ணுமில்லை. பாத்ரூம்ல டாய்லெட் போகும்போது வழுக்கி விழுந்துட்டேன்."

"ஐயோ... நீங்களே சும்மா கட்டு போட்டுகிட்டீங்களா?" -மீனாட்சி கேட்கும் போதே அந்தக் கட்டுப்போட்ட இடத்தில் லேசாக ரத்தம் ஒழுகியது.

மீனாட்சி அடுத்த விநாடியில் அலறிவிட்டாள்.

"ஐயோ ரத்தம்...! அண்ணே... ரத்தம்!"

"அட நீ வேற கத்தாதே. இது ஒண்ணுமில்லை. சும்மா லேசான காயம் தான்!" விசித்ரா அவள் வாயை அடைக்கப் பார்த்தாள். ஆனால் மீனாட்சி அதை காதில் வாங்காமல் திரும்பி ஓடினாள்.

அடுத்த சில நிமடங்களிலேயே பாண்டியனும், அவன் அக்கா ராஜாத்தியும் அந்த அறைக்கு வந்தனர்.

"விசித்ரா! வாட் ஹேப்பண்ட்? மீனாட்சி ஏதோ காயம்னாளே..." -என்றபடி அவள் கையைப் பார்த்தான் பாண்டியன்.

"நத்திங்... ஒண்ணுமில்ல பாண்டியன். சின்ன காயம்தான்."



"சின்ன காயமா...? சம்திங் ராங்? அங்க என்டான்னா பந்தக்காரனும் காயம்கறான். இன்ஃபாக்ட் நாம வந்த கார்கூட இப்ப நாம நிறுத்தின இடத்துல இல்லை. அதை யாரோ ராத்திரி திருடப் பாத்துருக்காங்க. அப்பா இப்ப பயங்கர டென்ஷன்ல இருக்கார்.

எங்க மல்லீஸ்வரி அம்மன் கோயில்ல கூட நடக்கக் கூடாதது எல்லாம் நடந்துருக்கு! என்ன நடக்குதுன்னே தெரியலியே..."

-பாண்டியன் பேசப்பேச விசித்ராவுக்கு உதறல் எடுக்க ஆரம்பித்தது. பார்வை அப்படியே திரும்பி தன் ஹோல்டான் பேக் மேல் சென்றது. அப்படியே உதடுகள் தந்தி அடிக்க "என்ன பாண்டியன்... என்ன... என்னவெல்லாமோ சொல்றீங்க?" - என்று லேசாக முகம் வெளிறினாள்.

"ஆமாம் விசித்ரா... யார்னு தெரியல. யாரோ ஒரு நபர் ராத்திரி எங்க கோவில்ல உள்ள அந்த திறக்கூடாத பெட்டியைத் திறந்து எங்க குல தெய்வத்தோட புடவை நகைகளை கொள்ளையடிக்க முயற்சி செய்துருக்கான்..."

-பாண்டியன் விவரிக்கும் போதே பார்வை ஜன்னல் பக்கம் சென்றது. ஜன்னல் சுவரிலும் ரத்ததிப்பிகள்.

ஓடிப்போய் எட்டிப்பார்த்தான்.

விசித்ராவுக்கு கதி கலங்கியது.

எட்டிப்பார்த்த பாண்டியன் கண்களில் ஓட்டுச் சரிவிலும் ரத்தத் திட்டுகள் தெரிந்து மிரட்டின.... படபடப்போடு திரும்பினான். விசித்ரா மிக வேகமாய் சமாளிக்க ஆரம்பித்தாள்.

"பாண்டியன் அ'யம் சாரி... நான்தான் உங்களை பயமுறுத்த வேண்டாம்னு காயம்னு சொன்னேன். ஒரு

ராஸ்கல் ராத்திரி இந்த ஜன்னல் வழியா உள்ள நுழையப் பார்த்தான். நான் அவன்கூட போராடும் போதுதான் இந்த காயம். என்னைக் கத்தியால் குத்திட்டு தப்பிச்சுட்டான்.

ஒரு நல்லகாரியம் நடக்க இருக்கும் போது நாம கூச்சல் போட்டு ரகளை பண்ண வேண்டாமேன்னு தான் நான் உங்களை கூப்பிடலை!"

-விசித்ரா அற்புதமாய் சமாளித்தாள். பாண்டியனுக்கு தலைசுற்றியது. கீழே அவன் அப்பா காசிலிங்க சேதுபதி கத்தும் சப்தமும், கொட்டுமேளம் தட்டிக் கொண்டிருந் தவர்கள் அதை நிறுத்திவிட்டதும் பளிச்சென்று உறைத்தது.

"சரி விசித்ரா... வாங்க முதல்ல டாக்டர்கிட்ட போவோம். அப்புறமா மத்த விஷயங்களைப் பார்ப்போம்." -என்று அவள் கையைப் பற்றி இழுத்தான்.

ராஜாத்தி கைகளைக் கூப்பியிருந்தாள். "தாயே மல்லீஸ்வரி... எங்க குடும்பத்துல ஏன் இப்படி எல்லாம் நடக்குது? நாங்க என்ன தப்பு செய்தோம்...?"

-என்று சரசரவென்று கண்ணீர் விட்டாள்.

"அக்கா வாக்கா... எல்லாத்தையும் அப்புறமா பேசிக்க லாம்." -என்று அவளையும் சேர்த்து இழுத்தான். விறுவிறு வென்று கீழே வந்தார்கள்.

ஹாலில் காசிலிங்க சேதுபதி கூண்டுப்புலி போல நடந்தபடி இருந்தார். சுற்றிலும் அவரது சகாக்கள். வாத்தியார் அருணாசலம், போர்டுமெம்பர் விநாயகம் என்று ஒரு பெரிய வட்டம்.

"வக்காளி... என்ன நெஞ்சழுத்தம் இருந்த ஆத்தா கோவில்லையே கைவைப்பான் அந்த கள்ளன்..."



"சேதுபதி! நீங்க பதட்டமே படாதீங்க. ஆத்தாளோட பொட்டியைத் தொட்டவன் எவன் உசுரோட இருக்கான்? ஒரு முப்பது வருஷத்துக்கு முந்தி பொட்டியைத் தொட்ட ஒருத்தன் என்ன ஆனான்...? எல்லாரும் தான பார்த் தோம்ல?"

-ஒருவர் கேட்ட கேள்வி பாண்டியனுக்கே புதிதாக இருந்தது.

"அப்பா... இந்த மாதிரி சம்பவம் இதுக்கு முந்தி நடந்துருக்குதா?"

"நடந்துருக்குதாவா...? என்ன பாண்டி தம்பி நீங்க. ஒருத்தன் கதை எழுதறேன்னு சொல்லி இந்த ஊருக்கு வந்து பொட்டியை திறந்து காட்டச் சொன்னான்...? ஐதீகக் குத்தம் வந்துடும்ல? அதெல்லாம் முடியாதப்புன்னு சொன்னோம்.

'உள்ள என்ன தங்கமா இருக்குது -அதை எதுக்கு இப்படி மூடி வைக்கிறீங்க'ன்னு கேட்டான். 'அது உள்ள செத்துப்போன ஒரு பத்தினியோட உசுரு இருக்குது. அது உள்ளார இருக்கறவரைதான் அதுக்கும் நல்லது-நமக்கும் நல்லது. வெளிய வந்தா ஊர் தாங்குமா?'ன்ற கேட்டா 'அதெல்லாம் ஒண்ணும் ஆவாது சும்மாதிறங்க'ன்னான் எலே ஓடிப்போயிரு'ன்னு நான்தான் கழுத்தப் பிடிச்சு தள்ளி உட்டேன். அப்படியும் அவன் போகலை. இங்கனவே சுத்திக்கிட்டிருந்துட்டு ராத்திரி யாருக்கும் தெரியாம கோவிலுக்குள்ள நுழைஞ்சு பெட்டியையும் திறந்து பாத்துட்டான்.

அப்பால ஊர் எல்லையைக்கூட அவனால தாண்ட முடியால. பாம்பு ஒண்ணு கடிச்சு நாலு நாள் உசுரு இழுத்துகிட்டிருந்துச்சு. அப்புறம் தான் செத்தான்."

–அந்த பெரியவர் தன் பாணியில் அளித்த விளக்கம் விசித்ராவைக் கூர்மையாக்கியது.

"ஆமாம்... அவர் பேர் என்னன்னு தெரியுமா?'' கேட்டாள்.

"யாருக்கு தாயி தெரியும். எந்த எழுத்தாளன் ஒழுங்கா அப்பன் ஆயி வெச்ச பேரை வெச்சிக்கிட்டிருக்கான்? அறிவழகன், தமிழழகன்னு குண்டாங்கு துரையால்ல பேர் வெச்சிருக்காங்க..."

அப்ப அவர் பேர் அறிவழகனா?"

"அப்படித்தான் நினைக்கேன்."

–விசித்ரா உடனேயே ஒரு சொடக்கு போட்டாள். உள் மனதுக்குள் பலவித நினைப்புகள். இந்த அசைன்மெண்டைத் தந்த பாஸ்கூட அறிவழகன் என்கிற பெயரை எப்பொழுதோ உச்சரித்ததாக ஞாபகம்.

"என்ன விசித்ரா... என்று யோசிக்கிறீங்க? வாங்க மருத்துவரைப் பார்த்துட்டு வரலாம்."

–பாண்டியன் அவளைக் கத்தரித்தான். அவளும் அவனுடன் புறப்படத் தயாரானாள்.

"அம்மா தாயி.... அந்த திருட்டுப் பயல பாத்தா அடையாளம் சொல்லுவியா?" – நகரப் பார்த்தவனிடம் சேதுபதி ஐயாவின் கேள்வி.

"ஓ... சொல்வேனே! தாராளமா... அவன் மூஞ்சி எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு." சமாளித்தாள்.

"நல்லது. நீ போய் வைத்தியரை பாத்துட்டு வா... அப்பால பேசிக்கலாம்." அவர் விடை தர அவள் புறப்பட...

"ஆமா இந்த நிலைல கட்டாயம் பூசை போடப் போறீங்களா?" –ஒருவர் கேட்டார்.



"எப்படிப் போட முடியும்? பொட்டில எதான இருக்குதா இல்லையான்னே தெரியல. உள்ள இருக்கறதா நம்பப்பட்ற புடவையும் நகை நட்டும் இல்லாட்டி பூசை போட்டு என்னாபிரயோசனம்?"

"அப்படி கேளுங்க. திறக்ககூடாததை திறந்து விட்டான் அந்த திருட்டுப்பய. அவனால இப்ப பூசையும் நிக்கப் போவுது?"

–அவர்கள் ஆளாளுக்கு பேசிக் கொண்டது சேதுபதி குடும்பத்தை கலக்கியது. அவர் மனைவி தெய்வநாயகி ராசாத்தியை கட்டிக்கொண்டு அழத்தொடங்கிவிட்டாள்.

"அடியே ராசாத்தி... இந்த வூட்ல ஒண்ணுக்கு இரண்டு பொட்டப்புள்ளீங்க இருக்கிங்க. உங்களுக்கெல்லாம் இனி ஒரு நல்லது கெட்டது நடக்குமாடி? எனக்கு பயமா இருக்குதுடி?..."

"சும்மா இரும்மா... இப்ப எதுக்கு புலம்பறே. நீதானே சொல்வே. அழுதாலும் புரண்டாலும் நடக்கப் போறத தடுக்க முடியாதுன்னு..."

–மொத்தத்தில் வீடே மாறிவிட்டது. வாங்கி வந்திருந்த காய்கறிகள், அறுக்கப்படவேண்டிய ஆடுகோழிகள் எல்லாமே நறுக்கப்படாமல் தேங்க, கொட்டுக்காரர்கள் தொடர்ந்து கொட்டு போடவா இல்லை மூட்டையை கட்டவா என்று கேட்காமல் கேட்டனர்.

சேதுபதி தீர்மானமாக சொன்னார்.

"இன்னிக்கு பூசை இல்ல. அதுக்கு பங்கம் வந்துடுச்சு. அதுக்காக உங்களுக்கு பேசுன காசு கொடுக்காம இருக்கமாட்டேன். வாங்கிட்டு புறப்படுங்க. அதே சமயம் அந்த கள்ளப்பய அகப்படணும். அதுவரை யாரும் தூங்கக் கூடாது. அவன் அகப்பட்டு எஞ்சாமி சரக்கு பெட்டிக்கு

வந்து சேரணும். அதையும் எஞ்சாமியே செஞ்சு தரணும். ஆத்தா மல்லீஸ்வரி ஈ...ஈ...ஈ...!"

சேதுபதி உக்ரமாக பேசிவிட்டு பட்டென்று சப்தமிட்டு -கைகளைத் தட்டியபடியே கூப்பிட்டார். கழுத்துக்கு மேல் தலைக்குமேல் என்று அந்தக் கூப்பியகைகளையும் கொண்டு சென்றார். மற்றவர்களும் அதைப் பார்த்துவிட்டு "அந்த ஆத்தா தான் ஐயா சொன்ன மாதிரி வழிய காட்டணும். அது மட்டும் சக்தி உள்ள தெய்வம்னா இதை அது செஞ்சேதீரணும்." என்றது உடனே ஒரு பெருசு.

காசிலிங்க சேதுபதியின் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

## 11

ராமலிங்க விலாச அரண்மனை!

முகப்பில் வந்து தேங்கிய சாரட் வண்டியில் இருந்து இறங்கி உள்ளே நுழையலானாள் கதலிநாச்சி. சாதாரணமாய் ராணி வருகிறாள் என்றாலே கட்டியமும், காவலும் கனஜோர்ராகிவிடும். ஆனால் ஒரு கேதத்திற்கு போய்விட்டு திரும்புவதால் அந்த துக்கத்தின் நிமித்தம் அரண்மனையில் எந்த ஆர்ப்பாட்டமும் இல்லை.

அரண்மனையின் வடக்கு வாசல் பகுதியில் ஒரு நீர்த்தொட்டி இருந்து அதில் அல்லியும் தாமரையும் மலர்ந்திருந்தன.

தண்டைக் கால்களின் கலீர் சப்தத்தோடு அதுவரை வந்த கதலி அந்த தொட்டி நீரில் தன் கால்களை கழுவிக் கொண்டாள். அடுத்த நொடியே சேடிப் பெண் ஒருத்தி ஒரு துவாலையை நீட்டினாள். அதைக் கொண்டு நீரொழுக்கை சீர் செய்து கொண்டவள் திரும்பவும் நடந்தாள். எதிரில் அவளது நாத்தி உடைய்யக்கா நாச்சி.



"எங்கே போய் விட்டு வர்றே... சரவணம்பட்டிக்கா?"

"ஆமாக்கா... மல்லி போய்ட்டா! உடன் கட்டைல கரியும் சாம்பலுமா ஆய்ட்டா." - சொல்லும் போதே வெடித்தாள் கதலி.

"ஹூம்! என்ன செய்யச் சொல்றே? செத்தும் புருஷன் கூட வாழத்துடிக்கற கூட்டம். அதனால தான் நம்ம மறச்சிகள்ல கைம்பெண்களே இருக்கறதில்ல."

"இது ஒரு பெருமையா அக்கா? நாம செத்தா அது மாதிரி நம்ம புருஷன் மாருங்க நம்ம சிதைல குதிப்பாங்களா?"

"இந்த மாதிரி எல்லாம் நானும் கேட்டவள்தான். ஆனா ஒண்ணை நீ புரிஞ்சுக்கணும். ஆம்பளைக் கோபுரம் மாதிரி. பொட்டச்சிங்க கர்பகிரகம். கோபுரத்தை எப்படிவேணா தொட்டு மாத்தலாம். கர்பகிரகத்தை மார்த்த முடியுமா?"

'உங்க சமாதானமே புரிய மாட்டேங்குது. நான் உங்க தம்பியை பாத்து சத்தம் போடப்போறேன். இந்த நாட்டுல எவ்வளவோ நல்ல விஷயங்கள அவர் பண்ணியிருக்கார். எல்லாத்தவிட முக்கியம் இந்த உடன் கட்டையை ஒழிக்கறதுதான்."

"பைத்தியக்காரி... துக்கவேதனை உன்னை இப்படி எல்லாம் பேசவைக்குது. போ... போய் தூங்கி ஒய்வெடு. எல்லாம் சரியாகியிடும்."

-உடையக்கா நாச்சி கதலியை அதிகம் பேசி அதட்டாமல் பக்குவமாய் தள்ளிவிட்டாள். கதலிக்கு மனசு ஆறவேயில்லை!

பொட்டல், சிதை மேடை, அதன் மேல் மல்லீஸ்வரி நின்று பேசியது. பின் எரியும் சிதையில் பாய்ந்தது எல்லாமே மனக்கண்ணில் தோன்றித் தோன்றி மறைந்தன.

அழுகை மீண்டும் கண்ணை மறைத்தது. கச்சிதமாக எதிரில் கிழவன் சேதுபதியும் சிரித்தபடியே வந்தார்.

"உங்களைத்தான் பார்க்க எண்ணியிருந்தேன்!"

"என்ன விஷயம் கதலி?"

"முதலில் நீங்கள் ஒரு சட்டம் போட வேண்டும். இனி யாரும் உடன்கட்டை ஏறக்கூடாது என்று..."

"என்ன திடீரென்று...?"

"இது ஒண்ணும் திடீர் இல்ல. உங்களுக்கெங்கே எங்கள் கஷ்டம் தெரியப்போகிறது. ஏன் பெண்ணுக்கு மட்டும் இப்படி ஒரு தலையெழுத்து...?"

–கதலிநாச்சி சம்பந்தமில்லாமல் பேசினாள்.

"சரிதான்... இந்த வருத்தம் மல்லீஸ்வரிக்காக இல்லை மொத்த பெண்கள் சமுதாயத்துக்குமா?"

"ஆமாம். அப்படித்தான்... ஏன் நாங்கள் மட்டும் உடன் கட்டை ஏறவேண்டும். ஒரு ஆண் –ஒரே ஒரு ஆண் தன் மனைவியின் சிதையில் உடன்கட்டை ஏறியிருக்கிறானா இந்த நாட்டில்..."

"அப்படியானால் உடன்கட்டை உனக்கு உடன் பாடான செயல். அதில் பெண்கள் மட்டும் இறங்குவது சரியில்லை. ஆண்களும் இறங்கவேண்டும் என்கிறாயா?"

–கிழவன் சேதுபதி மடக்கினார். "ஆமாம்... அப்படியும் கூட வைத்துக் கொள்ளுங்கள்."

"சரி... நாளைக்கே சட்டம்போட்டு விடுகிறேன். நாளைக்கே உனக்கு ஒன்று ஆகிவிட்டால் நானும் உடன் கட்டை ஏறிவிடுகிறேன். சரிதானே?"



கிழவர் பலத்த அதிர்ச்சியளித்தார். கதலி உடனே அவர் வாயைப் பொத்தி மூடினாள்.

"என்ன இது... மறந்துகூட அப்படி ஒரு காரியத்தை செய்துவிடாதீர்கள். உங்களிடம் இந்த நாடு எவ்வளவு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது தெரியுமா?"

"அப்படியானால் உன்னிடம் எதையும் எதிர்பார்க்க வில்லையா?"

"என்னிடம்... என்னிடம் என்ன இருக்கிறது. அதை நான் இந்த நாட்டிற்கு தருவதற்கு?"

"ஒன்றுமேயில்லையா?"

"என்ன இருக்கிறது என்னிடம்... உங்களோடு இருப்ப தால் தான் ராணி என்கின்றனர். இல்லாவிட்டால் அந்த மதிப்பும் கிடையாது.

"அப்படியானால் நானின்றி நீயில்லையா?"

"நிச்சயமாய்..."

"அப்படியானால் நான் இறந்து போனால் நீ உடன்கட்டை ஏறுவாயா மாட்டாயா?"

"அது... அது... என்னால உங்களைப் பிரிந்து ஒரு கணம் உயிர்வாழ முடியாது. உடன் கட்டை ஏறும்வரைகூட என் உடலில் உயிர் இருக்காது."

"எப்படியோ... கணவனைத் தொடர்ந்து அவனுடனேயே இருக்கவேண்டும். இதுதான் உன் போன்ற பெண்களின் ஆசை. அப்படித்தானே?"

"நிச்சயமாக... கணவன் இல்லாத வாழ்வும், கண் இல்லாத முகமும் ஒன்றுதானே?"

"இதை உணர்ந்துதானே மல்லீஸ்வரி உடன்கட்டை ஏறினாள். அதற்கு ஏன் நீ வருந்துகிறாய்?"

"அது... அது... அவளுடைய பிள்ளைகளை நினைத்துப் பார்த்தேன். அவள் விருப்பம் எதுவாக வேண்டுமானால் இருந்துவிட்டுப் போகட்டும். அந்த பிள்ளைகள் என்ன பாவம் செய்தார்கள். தந்தையை இழந்தால் தாயையும் இழக்க வேண்டியிருக்கிறதே அவர்கள் நிலை. அதை யோசித்துப் பாருங்கள்.

"இதில் நான் யோசிக்க ஒன்றுமில்லை. உடன் கட்டை என்பது ஒரு பெண்ணின் பரிபூரணவிருப்பத்தில் நிகழ்வது. அதை சட்டத்தால் தடுக்கமுடியாது. தடுக்கவும் கூடாது. ஒரு பெண்ணை உடன்கட்டைக்கு யாராவது தூண்டினால் அது குற்றம். அது கொலைக்குற்றமும் கூட, மாற்றாக அந்த பெண்ணே விரும்பி தீயில் இறங்கினால் அதற்கு நான் என்ன செய்யமுடியும்? அதை ஒரு புண்ணியச் செயலாகக் கருதும்வரை அதை யாராலும் தடுக்கமுடியாது. நீ மனதைத் தேற்றிக்கொள்."

கிழவன் அவளுக்கு ஆறுதலாகப் பேசினார். அவளுக்கே தான் எந்தப் பக்கம் இருக்கிறோம் என்று ஒருவிநாடி குழப்பம் ஏற்பட்டது.

களைப்போடு போய் படுக்கையில் விழுந்தாள்.

நள்ளிரவாகிவிட்டது!

இரவு பாராக்காரனும், காலம் காட்டியும் குரல் கொடுத்தும், நாகராவை முழக்கியும் தங்கள் கடமையைச் செய்தபடி இருந்தனர். அந்தப்புர அரண்மனை மஞ்சத்தில் கதவி நாச்சி ஆழ்ந்த் உறக்கத்தில் இருந்தாள். அப்பொழுது தங்கப்புடவையணிந்த ஒரு பெண் வானத்தில் இருந்து இறங்கி கதலியின் அறைக்குள் நுழைந்து கதலி முன் நின்றவளாய்.



"கதலி... கதலி..."

"யாரது?"- கதலியிடம் கண் விழிப்பு.

"என்னைத் தெரியவில்லையா...? நான் தான் மல்லீஸ்வரி"

"என்ன... மல்லீஸ்வரியா? மல்லி நீயா...? நீயா இப்படி பொன்னைப்போல மின்னுகிறாய்?"

"பொன்னால் ஆன புடவையை அணிந்தால் பொன்னைப் போலத்தானே அது மின்னும்."

"என்னது? தங்கப்புடவையா...? நீ அணிந்திருப்பதா?"

"ஆமாம். நீ வாங்க விரும்பியதுதான் என்னைத் தேடி வந்துவிட்டது. எப்படி இருக்கிறது?"

"ஓ... அபாரம்...? ஹூம்! எனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. உனக்காவது கிடைத்ததே..."

"கவலைப்படாதே... தங்கத்தைவிட பெரியது தங்கமான மனது. அது உன்னிடம் உள்ளது. உனக்கு ஒரு குறைவும் வராது. உனக்கு என் ஆசிகள்!"

"என்ன மல்லி... எனக்கே ஆசியெல்லாம் கூறுகிறாய் ஏதோ ஒரு தேவதையைப் போல?"

"சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் இப்பொழுது தேவதைதான். உங்களை எல்லாம் காவல்காப்பதும் இனி என் பணி."

"அப்படியா?"

"ஆமாம்... என்னை மறந்துவிடாதீர்கள். அதே சமயம் நானும் உங்களைவிட்டு விலகமாட்டேன். என்னை வணங்கும் வரை உங்களுக்கு ஒரு குறைவும் வராது. ஒரு குறைவும் வராது."

மல்லீஸ்வரியின் தங்க பிம்பம் அப்படியே விலகி காற்றில் கரைந்து மறைந்தும் போனது.

“மல்லி ஈ ஈ ஈ..” -தீனக்குரல் கொடுத்த கதலி நாச்சிக்கும் உறக்கம் கலைந்துபோயிற்று. கண்களை கசக்கிக் கொண்டு பார்த்தாள். நடந்தது கனவு என்று பிறகுதான் தெரிந்தது.

அவள் கத்திய கத்தல் உடையக்கா நாச்சியை இழுத்து வந்தது.

“கதலி... என்னாயிற்று?”

“ஒன்றுமில்லைக்கா... உடன்கட்டை ஏறின மல்லீ கனவுல வந்தா. அந்த மொகலாய வியாபாரி கொண்டு கிட்டு வந்த தங்கப்புடவையை உடுத்திட்டு ஜெக ஜோதியா நின்னா... எனக்கு கண்ணே கூசிடிச்சு. அப்படி ஒரு ஜொலிப்பு!”

“சரிதான்... கனவா...? அதிலும் அந்த தங்கப்புடவையா? அதைத் தான் கள்ளர்கள் கொண்டு போய்விட்டார்களே... சரி சரி தண்ணீர் அருந்திவிட்டு தூங்கு... நல்ல பெண்ணம்மாநீ!”

-உடையக்கா விலகினாள். கதலிநாச்சிக்கு மட்டும் தூக்கமே வரவில்லை. கண்களை மூடினால் எங்கே மல்லீஸ்வரி வந்து விடுவாளோ என்று அச்சமாக இருந்தது!

## 12

மதிய நேரம்!

சாப்பாட்டுக் களைப்பும், வெய்யிலின் உக்கிரமும் அகல்யாவை கொஞ்சம் அசத்தப் பார்த்தது. மதியம் தூங்கினால் தொப்பை விழும் என்று சிலர் சொன்னது ஞாபகத்தில் வந்தது. எனவே சமாளித்து டி.வி. சீரியல்



பார்க்க ஆரம்பித்தாள். அது அதிக தூக்கத்துக்குள் அவளைத் தள்ளப்பார்த்தது.

“என்னம்மா... தூக்கம் வந்தா தூங்க வேண்டியது தானே?” -அவள் அப்பா கேட்டபடியே வந்து எதிரில் உட்கார்ந்தார்.

“ஒருநாள் தூங்கினா அப்புறம் டெய்லி அதே மாதிரி தூக்கம் வந்துரும்னு பாக்கறேன். சொல்லும்போதே கொட்டாவி பிரிந்து இதழ்க்கடையில் தேன் சொட்டு போல் எச்சில் ஒழுகியது.

“பரவால்ல போ... போய் படு. ஆமா பாண்டியன்கிட்ட இருந்து ஏதாவது போன் வந்ததா?”

-அவர் பாண்டியனைப் பற்றி ஞாபகப்படுத்தவும் அவளுக்கு தூக்கம்கூட சற்று விலகிப்போனது. அவனுக்கு ஆபத்து என்று சொன்ன ஜோதிடர் முகமும் நினைவில் முண்டியது.

“என்னம்மா.... கவலப்பட ஆரம்பிச்சுட்டியா. அதான் ஊர்ல இருக்கற எல்லா சாமிக்கும் வேண்டிகிட்டு இருக்கியே. ஒண்ணும் ஆயிடாது-தைரியமா இரு.”

“இல்லப்பா... பயமா இருக்கு எனக்கு. நம்ம ஜோசியர் சொன்னா எல்லாமே நடந்துருக்கறதால எங்க இதுவும் நடந்துடுமோன்னு பயம் மென்னியப் பிடிக்குது.”

“தைரியமா இரு. பாண்டியனும் சாமி கும்பிடத்தானே போயிருக்கார். அவங்க குலதெய்வம்தான் பயங்கர சக்தி வாஞ்ச சாமின்னு சொல்வியே-கைவிட்டுடுமா என்ன?”

“ஆமாம்ப்பா... அந்த சாமிதான் காப்பாத்தணும். என்னையும் அவங்க வீட்ல ஏத்துக்கணும்.”

“எல்லாம் ஏத்துக்குவாங்க. நீ ரெஸ்ட் எடு முதல்ல.”

–அவர் நகர்ந்தார். அவளாலும் தூக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. தூக்கத்தில் அப்படியே கரைந்தாள்!

**வா**னத்தில் இருந்து ஒரு தேவதை! ஆனால் உடலில் ஒரு பொட்டுத் துணியில்லை. மார்பை இருகைகளால் மூடியபடி அந்தப் பெண் நேராக தூங்கியபடி இருக்கும் அகல்யா முன்னால்தான் இறங்குகிறாள்.

"அகல்யா... அகல்யா..."

"யாரு?" – கண்விழிப்பு.

"நான்தான் மல்லி... உன்குல தெய்வம்!"

"என்னது? குலதெய்வமா... நீயா-இப்படி நிர்வாணமா இருக்கற நீயா என் குலதெய்வம்-ச்சீய்!"

"நான் நிர்வாணமா ஆக்கப்பட்டிருக்கேன். என் ஆடையை ஒருத்தி திருடிட்டா. அவகிட்ட இருந்து நீதான் அதை மீட்டுத்தரணும்."

"என்ன சொல்றே... தேவதைங்கறே -உன்கிட்ட இருந்தே ஒருத்தியால திருட முடியுதா?"

"நான் தேவதைன்னா... அவ ராட்சஸி. அவளை அழிக்கணும். அழிச்சாதான் நீயும் பாண்டியனும்கூட ஒண்ணு சேரமுடியும்."

"நீ என்ன சொல்றே?"

"நான் இப்ப உன் உடம்புல புகப்போறேன். அந்த புடவையை நீ உடுத்தும்போது உன் உடம்பைவிட்டு விலகி வெளிய போயிடுவேன். அப்புறமா நீ அதை என்கிட்ட கொண்டு வந்து கொடுத்துடணும். என்ன?"

"நீ என்னென்னமோ சொல்றே... எனக்கு ஒண்ணுமே புரியலையே."



"போகப் போக எல்லாம் புரியும் பார். இனி நீ அகல்யா இல்லை. மல்லீஸ்வரி... மல்லீஸ்வரி!"

–அந்த தேவதை சொல்லியபடியே அவள் உடல்மேல் விழுந்தது. ஒரு ஒளி உடம்பு விழுந்து ஆகர்ஷித்தது போல இருந்தது. மளுக்கென்று அகல்யாவும் கண்விழித்தாள். எழுந்தாள். வெளியே வந்தாள். போர்டிகோவில் கார் காத்துக் கொண்டிருந்தது. ஏறி அமர்ந்தாள். கார் சீறத் தொடங்கிவிட்டது. அதே சமயம் அவள் அப்பா உள்ளே இருந்து ஓடி வந்தார்.

"அகல்யா... என்ன இது? காரை எடுத்துகிட்டு எங்க போறே... உனக்கு டிரைவ் பண்ணவே தெரியாதே?"

–ஹூம்! பலனே இல்லை அந்த கத்தலுக்கு. கார் சரவணம்பட்டி நோக்கி ஏதோ நூறு வருஷம் பழகின டிரைவர் ஓட்டும் தினுசில் ஓடிக்கொண்டிருந்தது!

**வீ**ட்டில் எல்லோரிடமும் நிசப்தம். குலதெய்வம் பூஜை நின்று விட்ட துக்கம் ஒரு புறம். அந்தத் திருடன் யார் என்பது தெரியாத ஏமாற்றம் ஒரு புறம். காசிலிங்க சேதுபதியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது.

சுற்றிலும் கையைப் பிசைந்தபடி அவர் சகாக்கள். மாடியில் இருந்து பார்த்துக்கொண்டே இருந்தாள் விசித்ரா.

பாண்டியனும் அருகில் இல்லை.

எங்கோ போயிருந்தான். அது ஒரு நல்ல சமயமாக தோன்றியது. மெல்ல ஒதுங்கி அறைக்குள் நுழைந்தாள். கதவைத் தாழிட்டுக் கொண்டு செல்போனைத் தட்டினாள். மறுமுனையிலும் குரல் கேட்டது.

"சொல்லு விசித்ரா... காரியம் சக்ஸஸ் தானே?

"சக்ஸஸா? கிரேண்ட் சக்ஸஸ். நீங்க சொன்னது அம்புலிமாமா கதை இல்லை. அவ்வளவும் உண்மை- எழுத்தாளர் அறிவழகன் சாகறதுக்கு முந்தி சொன்ன ஒரு உண்மையை நீங்களும் நானும் புரிஞ்சுக்க முப்பது வருஷம் தேவைப்பட்டிருக்கு..."

"வெரிகுட்! அப்ப புடவை அந்த பெட்டியில இருக்கா?"

"இருக்காவா...? அது இருக்கான்னு பார்க்கும்போதே அதை சுருட்டிட்டேன். சரி இனி இங்க ஒரு நிமிஷம்கூட இருக்கக்கூடாதுன்னு அப்பவே காரை எடுத்துக்கிட்டு கிளம்பப் பார்த்தேன். ஆனா முழிச்சிக்கிட்டிருந்த சிலர் பார்த்துட்டு ஓடி வந்தாங்க-அவங்க கண்ல படாம காரைவிட்டு இறங்கி ஓடி இருட்டுல சிலர் மேல் மோதி ஓ... விடியற்காலைல ஒரே ரன்னிங் ரேஸ்தான். கைலயும் காயம்."

"அப்புறம்... இப்ப எப்படி இருக்கே?"

"பொறுமை பாஸ். பொறுமை. எனக்கு ஒண்ணும் ஆயிடலை. புத்தி எதுக்கு இருக்கு? யூஸ் பண்ணாத்தானே? தப்பிச்சு ஓடின எனக்கு இருட்டு நல்லா கைகொடுத்துச்சு. ஓடுற நான் ஒரு பொண்ணுங்கறதே யாருக்கும் தெரியலை. த்ங்க்ஸ் டு தி ஜீன்ஸ் அண்ட் பனியன் ஷர்ட்.

அப்புறம் எப்படியோ தப்பி ஓடி என் ரூமுக்கே வந்து செட்டில் ஆயிட்டேன். இப்ப கிளம்பிகிட்டே இருக்கேன்."

"ஓ... மை... விச்சி.. கமான்யா! சீக்கிரமா வா. எனக்கு இப்பவே அந்த தங்கப்புடவையை பாக்கற ஆசையை அடக்க முடியலை."

"வெயிட் பாஸ். ஆக்கப் பொறுத்தவங்களுக்கு ஆறப் பொறுக்கலையோ? இங்க பூஜை நின்னுபோய் ஒரே



கசாமுசா... அந்த மல்லீஸ்வரியே வந்து திருடனைப் பிடிப் பாளாம். ரொம்ப ஜாலியா இருக்கு எனக்கு?"

"யார் அது மல்லீஸ்வரி... ஏரியா சப் இன்ஸ்பெக்டரா?"

-அடுத்த நொடி கலகலவென்று சிரித்தாள் விசித்ரா.

"நல்ல ஜோக் பாஸ்... மல்லீஸ்வரி ஏரியா சப் இன்ஸ்பெக்டர் இல்ல. இவங்க கும்புட நினைச்ச குலதெய்வம்.

"குலதெய்வமா... ஹோ! ஆமா இவங்கல்லாம் திருந்தவே மாட்டாங்களா?"

"பாஸ்... இவங்க இப்படியே இருக்கட்டும். அதுதான் நமக்கு நல்லது. இல்லேன்னா என்னால இங்க கை வரிசையை காட்டி இருக்க முடியுமா?"

-பேசிக்கொண்டே திரும்பினாள். எதிரில் மீனாட்சி. அவள் கண்களில் அசாத்ய விரிவு.

"பாஸ் நான் அப்புறம் பேசறேன்!"

-சட்டென்று போனை கட் செய்தவள் மீனாட்சியைப் பார்த்து சிரிக்க முயன்றாள்.

"நீ தான் ராத்திரி எங்க சாமி பெட்டியை திறந்து திருடுனவளா?"

-மீனாட்சி இறுக்கமான முகத்தில் உதட்டை மட்டும் மெலிதாக அசைத்துக் கேட்ட விதம் பயங்கரமாக இருந்தது.

"அது... அது... யார் சொன்னா? சும்மா...சும்மா ஒரு ஆள்கூட பேசிக்கிட்டிருந்தேன். அவ்வளவுதான்."

"இல்ல... நீ பொய் சொல்றே. நீ சாதாரண பொம்பள இல்ல- ரொம்ப பயங்கரமானவ-அண்ணே ஏஏஏஏ..."

-மீனாட்சி குரல் இறுதியாக பாண்டியனுக்கு அழைப்பை வைத்தது.

விசித்ராவுக்கு குலை நடுங்கத் தொடங்கிவிட்டது. ஓடிப்போய் அவள் வாயை அடைக்க முயன்றாள். அவளோ மூடிய கைகளை பற்களால் கடித்துக் குதறத் தொடங்கினாள்.

"ஏய்... விடு! விடு..." -இருவரும் போராடும்போது பாண்டியனும் வந்து சேர்ந்தான்.

"ஏய் விசித்ரா... என்ன இது? என்ன சண்டை உங்களுக்குள்ளா?" -பிரித்துவிட முயன்றான்.

"அண்ணே இவ நல்லவ இல்லை. இவதான் ராத்திரி நம்ம சாமி கோவில் பொட்டியை திறந்து அதுல இருக்கறத..."

-மீனாட்சி முடிக்க முடியாதபடி மீண்டும் வாயை மூடிய விசித்ரா தாமதிக்கவேயில்லை. ஹோல்டன் பேக்கைத் திறந்து சைலன்ஸர் துப்பாக்கி ஒன்றை வெளியே எடுத்தாள். முறைத்தபடி அப்படியே மீனாட்சியின் வயிற்றில் ட்ரிக்கரை அழுத்த அவளிடமிருந்து ஒரு எகிறல். உடல் அப்படியே அவள் பிடியில் இருந்து நழுவி கீழே சரிந்தது.

பாண்டியன் விக்கித்துப் போய்விட்டான். சுதாரித்து அவள்மேல் பாய்வதற்குள் அவன் தோளிலும் ஒரு தோட்டா பாய்ந்தது. தள்ளாடிக்கொண்டு கீழே விழுந்தான். விசித்ரா அடுத்த நொடி அங்கிருந்து விலகி ஓட ஆரம்பித்தாள்!

ஓட்டமான ஓட்டம்.



கையில் ஹோல்டன் பேக்குடன் போய் காரை ஸ்டார்ட் செய்தவளை பலர் ஆச்சரியமாக பார்த்து கேட்டனர்.

"என்ன தாயி புறப்பட்டுட்டியா?" ,

"அ... ஆமா!"

கார் சீறிக் கொண்டு ஓடத் தொடங்க, மாடியில் இருந்து ராஜாத்தியின் அலறல் சப்தமும் கேட்டது.

"அப்பா... அம்மா... பாண்டியனும், மீனாட்சியும் ரத்த வெள்ளத்துல கிடக்கறாங்க."

எல்லோரும் மேல் நோக்கி ஓடத் தொடங்கினர்!

## 13

சரவணம்பட்டிக்குள் அரண்மனைக் கோச்சு வண்டிகளும் குதிரை வீரர்களும் மீண்டும் நுழைவதைப் பார்த்து சரவணம்பட்டியே ஆச்சரியத்துடன் பார்த்தது. கோச்சுக்குள் கதலி நாச்சியார் இருந்தார்.

"என்ன இது... நாச்சியார் நமது சிற்றூருக்கு மீண்டும் பிரவேசித்திருக்கிறார்?"

"தெய்வமாகிவிட்ட மல்லீஸ்வரி தேவியார் ராணியாரின் கனவில் வந்தாராம். அதுவும் அவர் வாங்க நினைத்த விலை உயர்ந்த தங்கப் பட்டுப்புடவையை கட்டிக் கொண்டு... எனவே மல்லீஸ்வரி தேவியாரின் சதிமாதா கோவிலுக்கு பூசனைகள் புரிவதற்காகத்தான் நாச்சியார் வந்திருக்கிறாராம்!"

-சிலர் ஆச்சரியப்பட, சிலர் விடை கூற அதுதான் உண்மை என்பதுபேலே கதலி நாச்சியாரும் மல்லீஸ்வரி

யின் சதி மாதா கோயில் அமைந்திருக்கும் பொட்டல் பகுதிக்குத்தான் சென்றாள்.

முன்னாலே கல்மண்டபம் காட்சி தர மல்லீஸ்வரியின் கருகுமணி புடவை உள்ள பெட்டியை வைத்து ஒரு சிறிய கோயிலை உருவாக்கியிருந்தார்கள்.

சுதைப்புச்சுக்கள் கூட அவ்வளவாக காய்ந்திருக்க வில்லை.

கோவில் முன்னால் புடைசூழ வந்து நின்ற நாச்சியார் அன்றலர்ந்த மலர்களால் கட்டப்பட்ட ஒரு பெரிய மாலையை எடுத்துச்சென்று பெட்டி மேல் வைத்துவிட்டு விழுந்து வணங்கினாள்.

வணங்கிவிட்டு நிமிர்ந்தவள் எதிரில் அவளது உறவினர்கள்.

"என்னம்மா... என்ன இது திடீரென்று?"

மாமன்முறை உறவுடைய ஒருவர் கேட்டார்.

"ஆமாம் மாமா... திடீரென்றுதான்! மல்லீஸ்வரி என் கனவில் வந்தாள். என்னை ஆசிர்வதித்தாள். அவள் தெய்வமாகிவிட்டதை நானும் உணர்ந்துகொண்டேன். எனவே தான் அவளை வணங்க நான் வந்தேன்."

"உண்மைதானம்மா... இங்கே அவள் தன்மக்கள் கனவிலும் இதேபோல வந்து அதுவும் தங்கப்புடவை தரித்த நிலையில் தோன்றி அருள்வாக்கு கூறியுள்ளாள். அவள் உயிரோடு தான் இல்லையேயொழிய அவளது ஆன்மா நம்மைச்சுற்றியே இருப்பதை நாங்களும் புரிந்து கொண்டு விட்டோம். நீயும் இப்படி வந்து வணங்கியிருப்பது எங்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. 'ஒன்று மட்டும் உறுதி. இனி இந்த குடும்பத்துக்கு எந்தக் கேடும் வராது. வரவும் வழிகள் இல்லை. என்றாவது ஒரு நாள் மீண்டும் பிறந்து



வருவேன். அப்போது என் கணவரும் ஜென்மமெடுத்திருப் பார். அவரையே நான் திரும்ப கைப்பற்றி நூறாண்டுகள் சுமங்கலியாய் வாழவேன்'. என்று அவள் கூறிய அருள்வாக்கு எங்கள் காதிலேயே ஒலித்தபடி உள்ளது.",

"அப்படியா... கேட்கவே மகிழ்ச்சியாக உள்ளது. அதே சமயம் இனி ஒரு உடன்கட்டை ஏறும் சம்பவம் இந்த மண்ணில் எங்கும் நிகழாதபடி அவளே எல்லோருக்கும் மாங்கல்ய பலத்தையும் தரவேண்டும்."

"நிச்சயம் தருவாள். இறந்தவர்கள் பித்ருக்கள் ஆகிறார் கள். அவர்களுக்கு தெய்வ பலம் உண்டு என்பார்கள். எனவே உன் நம்பிக்கை வீண் போகாது!"

"போகக்கூடாது மாமா. போகக்கூடாது."

–என்றபடியே நாச்சி அங்கிருந்து புறப்பட்டு மல்லீஸ்வரி யும், வீரவல்லப சேதுபதியும் வாழ்ந்த அந்த மாளிகை போன்ற வீட்டுக்கு வந்தாள். அங்கே அவர்கள் இருவரின் ஓவியமும் அவளை வரவேற்பது போல மாலை சூட்டப் பட்டு காட்சியளித்தது. அதையும் பார்த்தாள். கண்களில் மீண்டும் நீரின் திரட்சி.

வாழ்க்கை என்பது பூவுலகில் மட்டுமில்லை என்று பர உலகிலும் வாழச் சென்றுவிட்ட அந்த ஜோடிகள் அவளை சிலிர்க்க விட்டிருந்தார்கள்.

"மல்லீ... நானும் உன்னைப்போலத்தான் செயல்படப் போகிறேன். உனது ஆசியால் நிச்சயம் நான் பெருவாழ்வு வாழ்வேன். ஒருகால் எனது விதி வேறு விதமாய் இருந்தால்கூட பாதகமில்லை. அதை ஒப்புக்கொண்டு உடன்கட்டை ஏறிவிடுவேன். என் பொருட்டு என் கணவரும் பாரபட்சமின்றி நான் முந்திக்கொண்டால் என்னைப் பின் தொடர்வதாய் கூறியுள்ளார்.

உனக்கொரு வேண்டுகோள்... அவருக்கு அப்படி ஒரு நிலை வரக்கூடாது. பெண்ணே என்றும் ஆணைத் தொடர வேண்டும். அவளே என்றும் அவனைத் தாங்கி நிற்க வேண்டும். இதற்கு உன் அருளாசி இருந்தால் போதும்."

–மனத்திற்குள் பிரார்த்திக் கொண்டவள் கண்ணிருடன் புறப்பட்டாள்.

அனைவரும் பரவசத்துடன் விடைகொடுத்து அனுப்பினார்கள். காலமும் உருளத் தொடங்கியது!

## 14

விசித்ரா காரை ஒரு புயலைப்போல செலுத்திக் கொண்டிருந்தாள். மனதில் வெற்றிகரமாய் ஒரு பெரிய காரியத்தை முடித்துவிட்ட செருக்கு.

இனி அந்த சென்னையிலேயே இருக்கக்கூடாது.

எங்காவது வெளிநாட்டுப் பக்கம் போய்விட வேண்டும்.

வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் கிடைக்காத ஒரு செல்வம் இந்த ஒரு அசைன்மெண்ட்டில் கிடைத்துவிட்டது.

இந்த அசைன்மெண்ட்டைக் கொடுத்த பாலு-ம் ஒரு ஜக்ஜ்ஜால கில்லாடி. எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் பாஸ்போர்ட்டும் விசாவும் எடுத்துக் கொடுக்க முடிந்த சாமர்த்தியசாலி... கோழைப் பெண்ணாய் இனி நாலாயிரம் ஐந்தாயிரத்தில் சம்பளத்தில் எவனோ ஒருவனுக்கு பொண்டாட்டியாகி பிள்ளைபெறும் எந்திரமாய் மாறி பின்ன கிழவியாகிச் சாவதைவிட இப்படி ஏதாவது த்ரில் லாக சாதனை செய்வது ஒரு சாகச வாழ்க்கை வாழ்வது தான் த்ரில்லான ஒன்று!"



–அவளுக்குள் தீர்மானங்கள். முடிவுகள். அதே சமயம் எதிரில் ஒரு காரும் பிசாசு வேகத்தில் வந்தபடி இருந்தது.

விசித்ராவுக்கே பயமாகிவிட்டது. ஒதுங்கி ஓரம்கட்டி வழிவிடப் பார்த்தும் முடியாதபடி அந்தக் கார் அவள் கார்மேல் நடுப்பக்கமாக பார்த்து மோதியது. சப்தம் காதைப் பிளந்தது.

காரும் ஒரு தகரடப்பா கணக்காக ஆகாயத்தில் எகிறி தலை குப்புற விழுந்து குப்பென்று தீயும் பிடித்தது. அந்த ஹோல்டான் பேக் மட்டும் வெளியே தனியாக போய் விழுந்தது.

மோதிய காரும் நசுங்கித் தீயின் பிடியில் கருகிடத் தொடங்க அதனுள் இருந்து ஒரு சிறுகாயம்கூட இல்லாத படி வெளியில் வந்தாள் அகல்யா.

அவளது சேலை முந்தானையிலும் தீ... துளிகூட சட்டைசெய்யாமல் எரியும் விசித்ராவின் காரில் இருந்து நல்ல வேளையாக வெளியே போய் விழுந்த அந்த ஹோல்டான் பேக்கை போய் எடுத்தாள்.

அப்படியே எரியும் சேலையை கழற்றிவிட்டு பேக்கில் இருந்த தங்கப்புடவையை எடுத்து உடம்போடு போர்த்திக் கொண்டாள்.

கண்களை இறுக்க மூடியவளாக அப்படியே மண்டி யிட்டு வானத்தைப் பார்த்தாள்.

ஈ.காக்கைகூட இல்லாத அந்த விபத்து பிரதேசத்தில் அப்பொழுதுதான் ஒரு கார் நுழைந்து கொண்டிருந்தது.

'ஹெல்ப்...!'' அகல்யா எழுந்து நின்று கத்தியபடி கைகளை நீட்ட காரும் நின்றது. உள்ளிருந்து ஒரு பேரதிசயம் போல் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் தலை எட்டிப்பார்த்தது.

நேம் பேட்ஜ்ஜில் மல்லீஸ்வரன் என்கிற பெயர். அகல்யா முகத்தில் ஒரு அர்த்த பூர்வ புன்னகை!

ஆஸ்பத்திரிக்கு சப்-இன்பெக்ஸ்டர் மல்லீஸ்வரனோடு வந்தபோது ஸ்தம்பித்துவிட்டார், காசிலிங்க சேதுபதி.

"தாயே நீயா...?"

"நான் அகல்யா..."

"இல்ல. நீ எங்க தாயி..."

"உங்க தாயிதான் இனி அகல்யா... கவலைப்படாதே. பாண்டியன் பொழைச்சுக்குவார். மீனாட்சிக்கும் ஒண்ணும் ஆகாது. எல்லாம் நல்லா ஆயிடும். திரும்ப பூஜைக்கு நாள் குறி. அப்ப அதுக்குள்ற இந்த புடவையை வைக்கணும். என்ன?"

-அகல்யா கேட்ட தொனி எல்லாருக்குமே ஆச்சரியத் தைத் தந்தது. அடுத்த நொடி மயங்கி விழுந்தவள் திரும்ப கண்விழித்த போது அருகிலேயே படுக்கையில் பாண்டியன்.

"அகல்..."

"பாண்டியன்..."

"நீ சொன்ன மாதிரி நடந்துடிச்சு. ஆமா யார் அந்த ஜோசியர்?"

"எதுக்கு... நாம ஒண்ணா சேரவழி வகுத்துக் கொடுத்த அவரைப் பாராட்டவா?"

"ஆமாம்!" -பாண்டியன் சிரித்தபடி சொன்னான்.

நான்கு ஆண்டுகளுக்கு பிறகு டிஸ்சார்ஜ் ஆகி சரவணம்பட்டி மாளிகைக்குள் நுழைந்தபோது அகல்யா வுக்கே ஆச்சரியமாய் இருந்தது. அங்கிருந்த அந்தக்கால ஓவியத்தில் உள்ள பெண்ணின் முகமும் அவள் முகமும்



ஒன்றுபோலவே இருந்தது. பாண்டியன் முகம் கிட்டத்தட்ட ஒத்துப்போனது. "பாண்டியன் நமக்கென்ன இது மறுஜென்மமா?" -கேட்டாள்.

"அது தெரியாது. ஆனா ஒண்ணு நான் எடுக்கப்போற எல்லா ஜென்மத்துலயும் நீ எனக்கு மனைவியா வந்தா சந்தோஷம்தான்." -என்றான் அவன். வீட்டுக்கு உடல் நலம் விசாரிக்க மஞ்சுவும் வந்திருந்தாள்.

"சார்... எங்க சார் இருக்கு அந்த கோயில்...? எனக்கு ஒரு நல்ல புருஷனைத் தரச்சொல்லி பிரார்த்தனை பண்ணிக்கணும் சார்." -என்றாள் கமறிய குரலில்.

"நீ வாம்மா நான் கூட்டிகிட்டு போறேன்." - என்று காசிலிங்க சேதுபதி அவளோடு புறப்பட்டார். பாண்டியன் திரும்பவும் அகல்யாவைப் பார்த்தான். அவள் "நடந்தெல்லாம் கனவா நனவான்னே தெரியில பாண்டியன். என்னென்னவோ நடந்துடிச்சில்ல...?" - என்று கேட்க அவன் ஒரு வரியில் சொன்னான்.

"அதுக்கு பேர்தான் அகல்யா வாழ்க்கை!"

**—முற்றும்—**

## பின்குறிப்பு:

வரலாற்றுச் சம்பவம் ஒன்றை பின்புலமாய்க் கொண்ட இந்த நாவல் ஒரு முழுக் கற்பனை. 1700களில் சேதுநாட்டை சீரும் சிறப்புமாய் கிழவன் சேதுபதி ஆண்ட நாட்களில் உடன்கட்டை ஏறும் சம்பவங்கள் ஒரு சமூகச் சடங்காகவே இருந்து வந்தது. அதற்கேற்ப கிழவன் சேதுபதி 1710-ல் மரணித்தபோது அவனது பத்தினியர் 48 பேர்! அவ்வளவு பேரும் அவனது சிதையில் விழுந்து உயிர்விட்டதாக வரலாறு உரிய குறிப்புகளுடன்

சொல்கிறது. எனவே உடன்கட்டை ஏறுவது ஒரு வழக்கமாய் இருந்த காலத்தில், உடன்கட்டை ஏறியவர்களை சதிமாதாக்களாய், அவர்களுக்கு நினைவுச் சின்னம் (அ) நடு கற்கள் எழுப்பி வழிபட்டதும் ஆதாரபூர்வமாய் வரலாற்றுக் குறிப்புகளில் உள்ளது.

எனவே அந்தப் பின்புலத்தை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொண்டு கற்பனையில் இன்றைய ஒரு வாழ்க்கை முறையோடு தொடர்பு செய்து இந்த நாவலை எழுதியுள்ளேன். இது ஒரு வித்தியாசமான கற்பனை. அவ்வளவே!

—இந்திரா செளந்தர்ராஜன்